# தமிழர் பொருண்மியம்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 100/= இதழ் - 74 08.09.2024




# பூநகரியில் பனம் விதைகள் சேகரிப்பு திட்டம்




வவுனியாக் குளத்தின் கதை இது! 08






உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் தகவல்களை பகிர்வதற்கான புதிய விதிகள் 10





வயல்அறுவடை விழா - 2024 14

# பூமித்தாயைப் பாதுகாப்போம்



வேதநாயகம் தபேந்திரன்

**இயற்கைப் பசளையை மட்டும் வைத்து விவசாயம் செய்ய முடியாது. அது பொய் என்பதெல்லாம் வெறும் பொய். செயற்கைக்கு மட்டும் பழகிப் போயிருந்த நிலத்தை இயற்கைக்குப் பழக்கப்படுத்த குறைந்தது இரு வருடங்கள் பிடித்தது. அதற்குப் பொறுமை தேவை. நட்டத்தைத் தாங்கும் பக்குவம் தேவை.**

அவர் யாழ்ப்பாணம் தீவகம் அல்லைப்பிட்டியிலுள்ள ஒரு விவசாயி. மழை காலத்தில் மானாவாரியாக வயல் செய்கை செய்து வருபவர்.

உரம் பாவிக்காமல் இயற்கைப் பசளையை மட்டும் பாவித்து வயல் செய்ய ஆரம்பித்தார். ஆடி பிறந்தவுடன் இலை குழை சருகு. எரு போன்றவற்றை வயலில் சென்று பரவிப் பறித்தார்.

மழை கண்டவுடன் உழுதார். புரட்டாதி மழை கண்டவுடன் புழுதி விதைப்பு விதைத்தார்.

நெற்கதிர்கள் வளர ஆரம்பித்தன. பக்கத்து வயல்காரர்கள் எவ்வளவு சொல்லியும் இவர் உரம் போடவில்லை. அவ் வருட விளைச்சல் போதாது. செலவழித்த காசு வரவில்லை. நட்டம். ஆனாலும் தளராமல் அடுத்த வருடமும் வழமை போலச் செய்முறைகளைச் செய்து விதைத்தார்.

இம்முறை போன முறையை விட அரைவாசி நெல் கூடுதலாக வந்திருந்தது.

ஆனாலும் சிறிதளவு நட்டம் வந்தது.

சற்றும் பின்வாங்காமல் அடுத்த வருடமும் இயற்கைப் பசளைகளை வயலில் இட்டு உழுதார். பருவத்தில் நெல் விதைத்தார். இம்முறை விளைச்சல் மிகவும் நன்றாக இருந்தது. மிகவும் சந்தோசப்பட்டார்.

அடுத்த வருடமும் வழமை போல இயற்கைப் பசளைகளை இட்டு நெல் விதைத்தார். கொத்துக் கொத்தாக நெல்மணிகள் விளைந்தன. அயலிலுள்ள ஊரிலுள்ள வயல்காரர்கள் எல்லாம் ஆச்சரியப்படும் வகையில் மிகவும் சிறந்த விளைச்சல். முதல் இரு வருடமும் பட்ட நட்டங்களையெல்லாம் தாண்டி நிறைய உழைத்தார்.

அடுத்தடுத்த வருடங்களில் வயல் தாய் தாராளமாகவே விளைந்து கொடுத்தாள்.

இங்கு என்ன அதிசயம் நிகழ்ந்தது.



உரத்துக்குப் பெருமளவுக்குக் காலாதி காலமாகப் பழக்கப்பட்டிருந்த வயல் நிலம் இயற்கைப் பசளைக்குப் பழக்கப்பட இரு வருடங்கள் எடுத்தது.

பழக்கப்பட்டவுடன் நல்லதொரு விளைச்சலைக் கொடுத்தது.

இயற்கைப் பசளையை மட்டும் வைத்து விவசாயம் செய்ய முடியாது. அது பொய் என்பதெல்லாம் வெறும் பொய். செயற்கைக்கு மட்டும் பழகிப் போயிருந்த நிலத்தை இயற்கைக்குப் பழக்கப்படுத்த குறைந்தது இரு வருடங்கள் பிடித்தது. அதற்குப் பொறுமை தேவை. நட்டத்தைத் தாங்கும் பக்குவம் தேவை.

எனது வீட்டில் காய்க்கும் தென்னைகளுக்கு மரங்களது அடியிலிருந்து எட்டடி தள்ளிக் கிடங்கு வெட்டிப் 2020 ஆவணி முதல் புரட்டாதி வரையில் பொச்சு மட்டைகள் நிறையத் தாட்டேன்.

2022 ஆம்ஆம் ஆண்டு முதல் நிறையத் தேங்காய்களைப் பெற்றுக் கொள்கிறேன்.

எண்ணிக்கையிலும் பருமனிலும் நிறையிலும் தேங்காய்கள் அதிகம் விளைகின்றன. தென்னை மட்டைகளைத் தாழ்க்கும் நடைமுறைகளை இன்றளவும் தொடர்கின்றேன்.

நடப்பு 2024 ஆம் ஆண்டில் மிகச் சிறந்த வருமானத்தைப் பெற்று வருகின்றேன். 2020, 2021, 2022, 2023 ஆகிய ஆண்டு





களில் மொத்தமாக 04 மாரி காலத்தைக் கண்டு விட்டேன். தென்னை மட்டைகள் ஈரலிப்பைத் தாங்கி வைத்திருப்பதுடன் தானும் பசளையாகி நிறைந்த விளைச்சலைத் தந்தன.

கோடை காலத்தில் தென்னை மரங்களுக்கு நீரிறைக்கும் தேவை எழவில்லை. இதனால் மின்சாரம் கட்டணமில்லை. இறைப்பதற்கான நேரம் தேவையில்லை.

அதேவேளையில் நிறைந்த வருமானத் தைப் பெற்றுள்ளேன்.

இயற்கை எப்போதும் இயற்கை தான். நாம் தான் வேகமாகவும் நிறையவும் அறுவடை செய்ய வேண்டும். நிறைய உழைக்க வேண்டுமென்று பூமித்தாயைச் சீரழித்து எமது உடலையும் சீரழித்து வருகின்றோம்.

மேலே சொன்ன முறைகளில் இயற்கைப் பசளை மட்டும் பாவித்துச் செய்யும் விவசாயத்தைக் கடைப்பிடித்தால் கிடைக்கும் நன்மைகளைப் பாருங்கள்.

01. எமது சூழலில் கிடைக்கும் கழிவுப் பொருள்கள் பொருளாதாரப் பயன் உடையவையாக மாறுகின்றன. இதனால் எமது பணம் சேமிக்கப்படுகின்றது.

02. செயற்கைப் பசளை இறக்குமதி செய்வதற்காக அரசாங்கம் பெருமளவு பணத்தைச் செலவிட வேண்டியதில்லை. அதனால் வெளிநாட்டுப் பணம் சேமிக்கப்பட்டு எமது பொருளாதாரம் உயரும்.





03. செயற்கைப் பசளை மூலமாக மண்ணில் பயிர்களுக்கு நன்மை செய்யக் கூடிய மண்புழு போன்ற உயிரினங்கள் அழிந்து போகின்றன. அவை தடுக்கப்பட்டு மண் வளம் பாதுகாக்கப்படும்.

04.செயற்கைப் பசளை,இரசாயனம் ஆகியவற்றால் நிலத்தடி நீர் மாசடைகின்றது. இதனால் இலங்கையில் மனிதர்களைப் பெருமளவில் கொல்லும் தொற்றாத நோயாகிய சிறுநீரகச் செயலிழப்புப் பரவலாக ஏற்படுகின்றது. அது தடுக்கப்படும்.

05. மிகச் சிறந்த அறுவடை மூலமாக நிறைந்த வருமானத்தை உழைக்க முடியும். எமது சுயபொருளாதாரமும்,தேசியப் பொருளாதாரமும் உயரும்.

இயற்கைப் பசளையைப் படிப்படியாகக் குறைத்து மிகப் பெருமளவில் இயற்கைப் பசளையை மட்டும் பிரயோகிக்கும் நிலையை ஏற்படுத்துவதாக எமது நாட்டின் விவசாய அமைச்சு பல வருடங்களுக்கு முன்னதாக திட்ட நடைமுறைகளைக் கொண்டு வந்தது. அது எந்தளவுக்கு நடைமுறையில் வந்ததெனத் தெரியவில்லை.

இராணுவத்தில் உயர் அதிகாரியாக இருந்து ஜனாதிபதியாக கோட்டபாய ராஜபக்ஷ இரவோடு இரவாக இயற்கைப் பசளைக்கு நாட்டைப் பழக்கலாமென நினைத்தது தவறு.

எது எப்படியோ எமது நாட்டின் பொருளா தாரம் பெருமளவுக்கு விவசாயத்துடன் பின்னிப் பிணைந்ததாக உள்ளது. நிலத்தடி நீர் தூய்மையற்றுப் போவது இந்தத் தண்ணீர்ப் போத்தல் வியாபாரிகளுக்கு விருப்பமானது.

அதனால் ஏற்படும் பாரிய பொருளாதார விரயம் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும்.

கால்நடை வளர்ப்பை ஊக்குவித்து ஆடு,மாடு ஆகியவற்றின் மூலமான பாலைப் பெருமளவில் பாவிக்கும் முறைமையை மக்களுக்குப் பழக்கப்படுத்த வேண்டும். இதன் மூலமாகக் கால்நடைகளின் கழிவாக வரும் எருக்களைப் பயன்படுத்தி இயற்கைப் பசளைத் தேவையைக் கணிசமான அளவுக்கு நிறைவேற்றலாம்.

அது போல வீடு, வளவுகளில், சூழலில் கிடைக்கும் இலை குழை சருகுகளைச் சேகரித்துப் பசளைத் தேவையை நிறைவேற்றும் நிலையை உருவாக்க வேண்டும்.

விவசாய அமைச்சின் அதிகாரி கள்,உத்தியோகத்தர்கள் பெயரளவில் இல்லாமல் செயலளவில் சிறப்பாக இயங்கும் நிலையை ஏற்படுத்த வேண்டும்.

இறக்குமதியில் மட்டும் நம்பியிருக்காமல் எமது சுயபொருளாதாரத்தை நாமே வளர்க்கும் நிலைமை இருந்தால் தான் நாடு முன்னோக்கி நகரும்.தமிழர் பொருண்மியம் உயரும்.

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0777304010 / 0702675575

# கடவுச்சீட்டு வரிசை சொல்லும் செய்தி!?

அத்தியாவசியப் பொருட்களுக்காக வரிசையில் காத்திருப்பதை இல்லாதொழித்துவிட்டதாக அரசாங்கமும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தரப்பினரும் பெருமையாகக் கூறிக்கொண்டாலும், கடவுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்காக கொழும்பிலும், வவுனியாவிலும் நாள்கணக்கில் வரிசையில் காத்திருப்பவர்களின் கதை முக்கியமான சில செய்திகளைச் சொல்கின்றது. அரச தரப்பில் நிர்வாகம் திட்டமிடல் எந்தளவுக்கு மோசமாக இருக்கின்றது என்பதை மட்டும் இது வெளிப்படுத்தவில்லை. நாட்டு மக்களில் கணிசமான தொகையினர் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்துவிடுவதைத்தான் விரும்புகின்றார்கள் என்ற செய்தியையும் இது சொல்லிநிற்கின்றது. இந்த நாட்டில் தமக்கு எதிர்காலம் உள்ளது என்பதில் நம்பிக்கை வைக்க முடியாதவர்களாகவே அவர்கள் இருந்தார்கள்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் உருவாகிய பொருளாதார நெருக்கடி இலங்கையில் பல மாற்றங்களை ஏற்படுத்தியது. “சிஸ்ரம் சேஞ்” ஒன்றை எதிர்பார்த்து இளைஞர்கள் ஆரம்பித்த போராட்டம் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தியது. அவர்கள் எதிர்பார்த்த முறைமை மாற்றத்தை அது கொண்டுவரவில்லை. பழைய நிலைதான் தொடர்கின்றது. இந்த நெருக்கடியின் போது அத்தியவசியப் பொருட்களைப் பெறுவதற்காக உருவாகிய வரிசைகள் பின்னர், கடவுச்சீட்டு அலுவலகங்களுக்கு முன்பாகத் தொடர்ந்தது. இலங்கையின் வரலாற்றிலேயே கடந்த இரண்டு வருடங்களில்தான் அதிகமானவர்கள் கடவுச் சீட்டுக்களைப் பெற்றிருக்கின்றார்கள். புலம்பெயர்ந்தவர்களும் இந்தக் காலத்தில்தான் அதிகம்.

இந்த நாட்டில் தமக்கு சிறப்பான எதிர்காலம் ஒன்றை இந்த அரசியல் தலைவர்கள் உருவாக்கித் தருவார்கள் என்பதில் இளைய தலைமுறையினர் நம்பிக்கை இழந்துவிட்டார்கள் என்பதன் வெளிப்பாடுதான் இது. கடந்த இரண்டரை வருடங்களாக இடம்பெற்ற ரணில் ஆட்சிகூட இந்த நம்பிக்கையைக் கொடுக்கவில்லை. தேர்தல் ஒன்றுக்கு நாடு தயாராகிக்கொண்டிருக்கும் நிலையில்கூட, மக்கள் வெளிநாட்டுகளுக்குச் சென்றுவிட வேண்டும் என்கதில் தீவிரமாக இருக்கின்றார்கள் என்பதைத்தான் கொழும்பிலும், வவுனியாவிலும் கடவுச் சீட்டுக்களைப் பெறுவதற்காக காத்துக்கடக்கும் மக்கள் உணர்த்துகின்றார்கள்.

தினசரி சுமார் இரண்டாயிரம் கடவுச் சீட்டுக்கள் வழங்கப்பட்டுவந்த நிலையில், இப்போது அது 900 ஆக குறைக்கப்பட்டுள்ளது. போதிய கடவுச் சீட்டு புத்தகங்கள் இல்லாமைதான் இதற்குக் காரணமாகச் சொல்லப்படுகின்றது. கடவுச் சீட்டுக்களை டிஜிட்டல் மயமாக்க அரசு எடுத்த முயற்சியில் ஏற்பட்டுள்ள தாமதம்தான் இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. இதனால், அரசாங்கத்துக்கு மாதாந்தம் பல கோடி ரூபா நட்டம் ஏற்பட்டிருப்பதாகவும் விமர்சிக்கப்பட்டுள்ளது. மறுபுறம் கடவுச் சீட்டு வழங்கும் குடிவரவு, குடியகல்வு திணைக்கள அலுவலகங்களுக்கு முன்பாக இரவு பகலாக காத்திருப்பவர்களுக்கு பதிலளிக்கும் நிலையில் அரசு இல்லை.

# சேனை பயிர்ச்செய்கை

**சேனை பயிர்ச்செய்கை அறுவடையின்போது பெறப்படும் வெளியீடுகள் அதிகளவில் நுகர்வுக்காக பயன்படுத்தப்படுகின்றது. 6)சேனைப்பயிர்செய்கையில் மிளகாய், எள்ளு, கத்தரி, பூசணி, வெங்காயம், குரக்கன், சோயா, அவரை, பயறு, மரவள்ளி, மரக்கறிகள் ஆகியன பயிரிடப்படுகின்றன.**

க .அமுதன்– கீரிமலை

உலகிலே மிக பழமை வாய்ந்த பயிர்செய்கையாக சேனைப்பயிர்செய்கை காணப்படுகின்றது. இது ஆரம்பகாலங்களில்சுயதேவையினை நோக்கமாக கொண்டு மேற்கொள்ளப் பட்டது. சூழலுக்கு தீங்கு விளைவிக்காத பயிர்செய்கையாக மக்களினால் நம்பப்படுகின்றது. குறிப்பாக காடுகளினை எரித்து அதில் வருகின்ற சாம்பலினை கொண்டு நிலத்தினை பண்படுத்தி மேற்கொள்கின்ற பயிர்செய்கையாக சேனைப்பயிர் விளங்குகின்றது.

இலங்கையினை பொறுத்தவரை 5000ஆண்டுகளுக்கு முன்னர் சேனைப்பயிர்செய்கை மேற்கொள்ளப் பட்டது. இலங்கையில் அனுராதபுரம், மொனராகலை, மஹியங்கனை, அம்பாந்தோட்டை ஆகிய இடங்களில் சேனை பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. சேனை பயிர்செய்கையை சிங்கள மொழியில் “கிலி” என அழைத்து கொள்ளுவார்கள்.

உலகளாவிய ரீதியில் சேனைப்பயிர் செய்கையானது பரந்துபட்ட அளவில் மேற்கொள்ளப்படுகின்றது. குறிப்பாக மத்திய அமெரிக்காவில் மெக்சிகோவிலும், தென் அமெரிக்காவில் அமேசான் பகுதி, பிரேசில், உருகுவே ஆகிய பகுதிகளிலும் மத்திய அமெரிக்காவில் கொங்கோ, சாட், நைஜீரியா, கென்யா, அங்கோலா ஆகிய இடங்களிலும் ஆசியாவில் இலங்கை, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், மலாயா பகுதிகளிலும் மேற்கொள்ளப்படுகின்றது.

உலகில் சேனைப்பயிருக்கு வழங்கப்படும் பெயர்கள்

1) அமேரிக்கா, ஆபிரிக்கா- மில்பா
2)கிழக்கிந்திய தீவுகள்- லாடாங்
3)பிலிப்பைன்ஸ்- டௌங்கியா
4)இலங்கை- சேனைப்பயிர்செய்கை


**சேனைபயிர் செய்கையின் முக்கிய அம்சங்கள்**

1)ஆரம்ப காலங்களில்சுயதேவைக்காக பயிரிடப்படுகின்ற பயிராக சேனை பயிர் நடவடிக்கைகள் காணப்படுகின்றன.

2)காலத்துக்கு காலம் இடமாற்றம் செய்து பயிரிடப்படும் பயிர்செய்கையாகும். ஏனெனில் ஒரே இடத்தில இப்பயிர் செய்கையினை மேற்கொள்ளும் பொருட்டு நிலத்தின் வளம் குன்றுகின்ற நிலை ஏற்படும்.

3)காடுகளினை அழித்து சாம்பலினை பயன்படுத்தி மண்ணினை பண்படுத்தி மேற்கொள்கின்ற பயிர்செய்கையாக இது காணப்படுகின்றது.

4)மழையினை ஆதாரமாக கொண்டு மேற்கொள்கின்ற பயிர் செய்கையாகும். இலங்கையில் வடகீழ் பருவக்காற்று மழையினை நம்பி சேனைப்பயிர்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.



5)சேனை பயிர்ச் செய்கை அறுவடையின்போது பெறப்படும் வெளியீடுகள் அதிகளவில் நுகர்வுக்காக பயன்படுத்தப்படுகின்றது.

6)சேனைப்பயிர் செய்கையில் மிளகாய், எள்ளு, கத்தரி, பூசணி, வெங்காயம், குரக்கன், சோயா, அவரை, பயறு, மரவள்ளி, மரக் கறிகள் ஆகியன பயிரிடப்படுகின்றன.

7)சேனை பயிர்செய்கையானது இலங்கையில் 4 வகை முறையில்

தொடர்ச்சி 18 ம் பக்கம்...




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,93,600 ரூபா.**

**24 கரட் தங்கம் 2,11,150 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**




**கேள்வி -** ஸ்மாட் போன்கள் எம்முடைய உரையாடல்களை ஒட்டுக்கேட்பதாகவும், அதனால் ஆபத்து என்றும் சொல்லப்படுவதில் உண்மை இருக்கிறதா?

**லதா மகேஸ்வரன்,**
**இணுவில்**

**பதில் -** அதில் ஓரளவுக்கு உண்மை இருக்கத்தான் செய்கிறது. நம்முடைய ஸ்மார்ட்போன் நாம் பேசும் உரையாடல்களை கவனிப்பதாக, பேஸ்புக் மற்றும் அமேசான் நிறுவனங்களுடன் பணியாற்றும் பிரபல நிறுவனம் ஒன்று ஒப்புக் கொண்டுள்ளது.

நாம் சமூக வலைதளங்களை பயன் படுத்தும்போது எதேச்சையாக ஏதாவது ஒரு விளம்பரத்தை க்ளிக் செய்திருந்தால் தொடர்ந்து அது பற்றிய விளம்பரங்களாகவே வருவதை கவனித்திருப்போம். இன்னும் ஒருபடி மேலே போய் போனிலோ அல்லது நேரிலோ ஏதாவது ஒரு பொருளை வாங்கவேண்டும் என்று யாரிடமாவது பேசிக் கொண்டிருந்த பிறகு, அது தொடர்பான விளம்பரங்கள் வருவதையும் நீங்கள் கவனித்திருக்கலாம்.

பல ஆண்டுகளாக வெறும் ஊகமாக இருந்த இந்த விவகாரம் தற்போது உண்மையாகியுள்ளது. தொலைக்காட்சி, வானொலி செய்திகளில் முன்னணி நிறுவனமாக விளங்கும் காக்ஸ் மீடியா குரூப் (Cox Media Group) தனது முதலீட்டாளர்களுடனான கலந்துரையாடலின் போது, ஆக்டிவ் லிஸனிங் டெக்னாலஜி (Active Listening technology) என்ற மென்பொருளின் மூலம் செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தி மைக் வழியாக நம்முடைய உரையாடல்களை நமது ஸ்மார்ட்போன் கவனித்து அதற்கு ஏற்ப எதிர்வினையாற்றுவதாக தெரிவித்துள்ளது.

இந்த நிறுவனம் பல ஆண்டுகளாக பேஸ்புக், அமேசான், கூகுள் உள்ளிட்ட நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றி வருகிறது. நம்முடைய வாய்ஸ் டேட்டாவை சேகரித்து விளம்பர நிறுவனங்களுக்கு அனுப்பி வாடிக்கையாளர்களுக்கு ஏற்ற விளம்பரங்களை அனுப்பவதில் இந்த தொழில்நுட்பம் முக்கிய பங்கு வகிக்கிறது. 470க்கும் அதிகமான மூலாதாரங்களில் இருந்து ஏஐ மூலம் இயங்கும் இந்த மென்பொருள் குரல் தரவுகளை சேகரிப்பதாக கூறப்படுகிறது. குறிப்பாக இது நாம் போனில் பேசுவது மட்டுமின்றி நேரில் பேசுவதையும் கவனிக்கிறது.

இந்த தகவல்களை 404 மீடியா என்ற ஊடகம் தற்போது அம்பலப்படுத்தியுள்ளது. கடந்த டிசம்பர் மாதம், காக்ஸ் மீடியா குரூப் நிறுவனம் குறித்து தனது பாட்காஸ்டில் அம்பலப்படுத்தியிருந்த நிலையில், தற்போது அதன் ஒட்டுக் கேட்கும் தொழில்நுட்பம் குறித்து வெளிக்கொண்டு வந்துள்ளது.

சென்னையைத் தளமாகக்கொண்ட தினசரி ஒன்று இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளது.

**உங்கள் கேள்விகளை**

**தமிழர் பொருண்மியம்,**
**கிறீன் மீடியா ஹவுஸ்,**
**68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.**
**என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.**
**வாட்ஸ் அப் முகவரி +94 777 304010**




| | |
|---|---|
| கத்தரிக்காய் | 180/= |
| உருளைக்கிழங்கு | 200/= |
| பச்சை மிளகாய் | 250/= |
| தக்காளி | 300/= |
| மரவள்ளிக்கிழங்கு | 180/= |
| கோவா | 300/= |
| கரட் | 380/= |
| வாழைக்காய் | 300/= |
| சின்ன வெங்காயம் | 200/= |
| பாகற்காய் | 300/= |
| வெண்டிக்காய் | 100/= |
| பயற்றங்காய் | 300/= |
| பீற்றூட் | 300/= |
| முருங்கைக்காய் | 180/= |
| தேங்காய் | 130/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 196/= |
| கனடா டொலர் - | 216/= |
| சீன யுவான் - | 41/= |
| யுரோ - | 334/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர்டொலர் - | 224/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 385/= |
| சுவிஸ் பிராங் - | 345/= |
| அமெரிக்க டொலர் - | 294/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 206/= |
| கனடா டொலர் - | 226/= |
| சீன யுவான் - | 43/= |
| யுரோ - | 338/= |
| ஜப்பான் யென் - | 2.1/= |
| சிங்கப்பூர் டொலர் | 235/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 400/= |
| சுவிஸ் பிராங் - | 361/= |
| அமெரிக்க டொலர் - | 304/= |

அது வேற ஒண்டும் இல்லை இது எங்கட கடல்....எங்கட கடலை, கடல்வளத்தை, கடல்தொழிலை, கடல் எல்லையை நாங்கள் பாதுகாக்க வேணும் அதை சுத்தமா வைச்சிருக்க வேணும் எண்ட செய்தியைச் சொல்லுறது தான் தீர்தத்திருவிழாவில இருக்கிற முக்கியமான செய்தி.




# எங்கட ஆச்சி



காரைக்கவி கந்தையா பத்மானந்தன்

இந்த வரியமும் எங்கட வாரிவளவுப் பிள்ளையார் தீர்த்தோறசவம் வழக்கம் போல வியாவில் தீர்த்தக்கரை எனப்படும் ஐயனார் கோவில் தீர்த்தக்கரையில நடந்தது .பிள்ளையார் ஊர்வலமாகப் போய்த்தீர்த்தம் ஆடிப்போட்டு பேந்தும் ஊர்வலமாய்த் திரும்பி வருவார் .அப்பிடி நாங்கள் போய்வரேக்க எங்கட வெளிநாட்டால வந்த தம்பி ஒருத்தன் இது ரைமை வேஸ்ற் ஆக்கிற வேலை எத்தினை பேர் வேலை மினக்கெட்டு ஊர்வலம் போய் தங்கட நேரத்தை வீணாக்கினம்.

அப்பிடித் தீர்த்தம் ஆட வேணும் எண்டால் கோயில் கிணத்திலை நாலு வாளி தண்ணி அள்ளி ஊத்தினா நேரமும் மிச்சம் செலவும் மிச்சம். வெள்ளைக் காறன் இப்பிடி விசர் வேலை ஒண்டும் செய்யிறேல்லை. அதாலதான் அவன் முன்னேறி இருக்கிறான் எண்டான்.

அவன் அப்பிடிச்சொல்லவும் வீட்டம்மா என்ரை அவல் நிறைஞ்ச வாயைப்பாத்துச் சிரிக்கிறா. பிள்ளையார் உப்பிடித் தீர்த்தக் கரையாலை ஊர்வலமாய் வரேக்கை ஆக்கள் படலைவழியை பூரண கும்பம் வைச்சு பிள்ளையாருக்குப் பிடிச்ச அவல் , கடலை, வடை , மோதகம் , அப்பம் எல்லாம் படைப்பினம் . அதோட தீர்த்தம் ஆடிப்போட்டு வாற ஆக்களுக்கு கோப்பி தேத்தண்ணி சோடா எல்லாம் குடுப்பினம் .

அருச்சினை முடிய நைவேத்தியம் வைச்ச சாமான்களை ஆக்களுக்குக் குடுப்பினம் . நாங்கள் பால் வயது வேறுபாடு இல்லாமல் அடிபட்டு வாங்குவம் . உப்பிடி அடிபட்டு வாங்கின அவல் கடலை முடியும் வரையும் நான் வாய்திறக்க மாட்டன் எண்டு வீட்டம்மாவுக்குத் தெரியும். உந்தக் கோயில் திருவிழாவில தள்ளுப்பட்டு இடிபட்டு ஏன் சிலநேரம் அடிபட்டு வாங்கித் தின்னிறதில இருக்கிற சுவாரசியம் அதை அனுபவிச்சவைக்குத்தான் தெரியும்.

இப்பிடி ரெண்டு கையிலையும் நிறைய வாங்கித்தின்னேக்கை வேட்டி இடுப்பில இறுக்கமா நிக்குதோ எண்டு பாக்க வேணும். பேந்து தின்னிற அமளியில வேட்டி கழண்டு விழுகிறதும் தெரியாது.

சரி நான் விசயத்துக்கு வாறன். திண்டு முடிஞ்ச பிறகு நான் அவன் வெளிநாட்டுத் தம்பியிட்டை எட தம்பி எங்கட பழைய ஆக்கள் ஒவ்வொரு விசயத்தையும் ஏதோ ஒரு காரணத்தோடதான் செய்திருக்கிறாங்கள் எண்டு எங்கட ஆச்சி நெடுகவும் சொல்லிறவ .

ஆனா அந்த மோடங்கள் ஏன் செய்யிறம் எதுக்குச் செய்யிறம் எண்டு சொல்லாமப்போட்டாங்கள் எண்டு அவ கவலைப்படுகிறவ எண்டு சொன்னன் .இப்ப தீர்த்தம் ஆடச்சாமி கடற்கரைக்கு வாறதுக்கு ஆன்மீகக் காரணங்களை விடப்பெரிய அரசியல்சமூக பண்பாட்டியல் சூழலியல் காரணியள் இருக்கெண்டு அப்பு சொன்னது ஞாபகத்துக்கு வந்தது.

அது வேற ஒண்டும் இல்லை இது எங்கட கடல்....எங்கட கடலை, கடல்வளத்தை, கடல்தொழிலை, கடல் எல்லையை நாங்கள் பாதுகாக்க வேணும் அதை சுத்தமா வைச்சிருக்க வேணும்எண்ட செய்தியைச்சொல்லுறது தான் தீர்தத்திருவிழாவில இருக்கிற முக்கியமான செய்தி.

உதுக்காத்தான் எங்கட ஆக்கள் பரந்தாமனைக் கடலிலை பள்ளி கொள்ளச் செய்தவை. அதாலதான் அவரும் மச்சாவதாரம் எண்டும் கூர்மாவதாரம் எண்டும் எடுத்தவர் தெரியுமோ. தேவர்களும் அசுரர்களும் பால்கடலைக் கடைஞ்ச கதையும் உந்த நோக்கத்துக்காக வந்ததுதான் எண்டன்.

அது மட்டும் இல்லை அங்கை கடல்லை சாமியோட சேர்ந்து எல்லாரும் எந்த ஏற்றத்தாழ்வும் இல்லாம பெரியவன் சின்னவன் ஆண் பெண் எண்ட வேறுபாடில்லாமல் சமத்துவமா தீர்த்தம் ஆடுவினம் .உதால சமூக உறவுகள் எல்லாம் மேம்படும் எண்டன்.

உது மட்டும் இல்லை நாங்கள் ஏன் பிள்ளையாரை ஊர்வலமாக் கொண்டு வாறம் எண்டதுக்கும் பெரிய சமூகக்காரணம் இருக்கு. அது என்னண்டால் உப்ப உங்க கன வருத்தம்வாதைக்காறர் நடக்க கிடக்க ஏலாததுகள்வயசு போனதுகள்துடக்குத்தூய்மைகாறர் பிள்ளைப்பெத்தவை எண்டு கனபேருக்கு கோயிலுக்கு வரேலாமல் இருக்கும்.

அப்படி வராம இருக்கிற ஆக்களுக்கும் அருள வேணும் எண்டு போட்டுத்தான் பிள்ளையார் இப்பிடி ஊர்வலமா தெருவால அவையின்ரை படலையடிக்கு வாறவர் தெரியுமோ எண்டு கொண்டு திரும்பிப் பாக்கிறன் அவனைக் காணேல்லை. வெள்ளைக்காறனுக்கு விளக்கம்சொல்லப் போயிருப்பான் எண்டா வீட்டம்மா.

# உங்கள் படைப்பாக்கத் திறனுக்கு ஒரு வாய்ப்பு



நவீன காலத்தில் உற்பத்தித் துறையில் ஈடுபடும்போது அதனை மேம்படுத்தவும் இலகுபடுத்தவும் புதிய உபகரணங்கள் அல்லது இயந்திரங்கள் தேவைப்படுகின்றன.

அவ்வாறான கருவிகள் பலவற்றை கடந்த காலங்களில் எம்மவர்கள் கண்டுபிடித்திருக்கின்றார்கள்.

உங்களிடமும் அவ்வாறான ஒரு யோசனை இருந்து, அதனைச் செயற்படுத்த உதவி தேவையாக இருந்தால் அதனை வழங்க தமிழர் பொருண்மியம் தயாராக இருக்கின்றது.

இரண்டு பிரிவுகளாக இதற்கான உதவிகளை வழங்குவதற்கு பொருண்மியம் குழுவினர் திட்டமிட்டுள்ளார்கள்.

## உள்நாட்டு உற்பத்தி மேம்பாட்டிற்கான புதிய இலகு கருவிகளை கண்டுபிடித்தல்

1.வேலையை இலகுபடுத்துவதும் நேரத்தை மிச்சப்படுத்துவதுமாக அமைதல்.

2.சமூக பாவனைக்கு உகந்ததாகவும் பாதுகாப்பானதாகவும் அமைதல்.

3.கூடுதலாக கிடைக்கப்பெறும் வளங்களைக்கொண்டு உருவாக்க கூடியதாக அமைதல்.

4.ஏற்கனவே கண்டுபிடிக்கப்படாத, சொந்த தயாரிப்பாக இருக்க வேண்டும்.

5.நியாயமான விலையில் எல்லோருக்கும் கிடைக்ககூடியதாகவும், அனைவரும் பயன்படுத்தகூடியதாகவும் அமைதல்.

இதற்கான உங்கள் யோசனைகளை நீங்கள் முன்வைக்கலாம். உங்களுடைய முன்மொழிவுடன் அதற்குத் தேவையான செலவுத் தொகையும் குறிப்பிடப்பட வேண்டும்.

தெரிவு செய்யப்படும் திட்டங்களுக்கு தேவையான நிதி உதவியை வழங்க தமிழர் பொருண்மியம் தயாராகவுள்ளது.

## மக்களை வலுப்படுத்தும் சனசமூக நிலையங்களினை அடையாளப்படுத்தல்

1.பதிவுசெய்யப்பட்ட சனசமூக நிலையங்கள் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

2.இவர்கள் தமது சமூகத்து மக்களையும் உள்ளூர் வளங்களையும் இணைத்து திட்டங்களை மேற்கொள்வது பொருத்தப்பாடானது.

3.அவர்கள் தமது சமூகத்தின் வளர்ச்சிக்காக ஆற்றிவரும் பணிகளையும் , வரும் காலத்தில் உள்நாட்டு அல்லது தமது சமூகத்தில் செயற்படுத்துவதற்கு ஆயத்தமாக இருக்கும் திட்டங்களையும் சமர்ப்பிக்கலாம்.

4.திட்டங்கள் அனைத்தும் அந்த சமூகத்தின் நன்மை கருதுவனவாயும், அவர்களனைவரதும் வாழ்வாதாரத்தை பலப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும்.

5.கண்காணிப்பு குழுவினரால் ஆராய்ந்து முடிவுறுத்தப்படும் திட்டங்கள் போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும். அதற்கான நிதி உதவிகளும் வழங்கப்படும்.

மேலதிக விபரங்கள் அடுத்த வாரம்

உங்களுடைய முன்மொழிவுகளை வாட்ஸ் அப் மூலமாகவோ மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பிவைக்கலாம்.

**வாட்ஸ் அப் இலக்கங்கள் +94 777 30 4010 / +94 702 67 5575**
**மின்னஞ்சல் - tamilseconomy@gmail.com**

**இன்றைய வவுனியா நகரின் கழிவுகளுக்காக யந்திரங்கள் மூலமாக கழிவுகள் நடுக்குளத்தில் சேர்க்கப்படுவதை காண்கிறோம். ஒரு அருமையான உல்லாசப் பயணத்தலமாக மாற வேண்டிய குளவெளி இப்படி பாழாய்க்கிடக்கிறது. குளங்கள் என்பவை பாசனத்துற்காகத்தான் என்றல்ல. அதன் உபரி வருமானங்கள் அந்த குளத்தையண்டி குடியிருக்கும் மக்களுக்கானதுமாகும்**

# வவுனியாக் குளத்தின் கதை இது!

## பார்வை 5



தமிழ்க்கவி



விளாங்குளம் என்றழைக்கப்பட்ட வவுனியாக்குளம் வவுனியா நகரை அடுத்து வடக்கெல்லையாக தெரியும் குளம் விளாங்குளம் என அழைக்கப்பட்டது. பின்னாளில் அதன் பெயரை வவுனியன் குளமாக்கி இன்று வவுனியாக்குளம் ஆகிவிட்டது.

பாரம்பரியமான குடியிருப்புக் கிராமம் இது. இதன் வான் பெரும் பாறைகளால் இயற்கையாக அமைந்துள்ளது. பொதுவாகே குளங்களின் வான் கட்டுகள் இப்படி பாறைகளைக் கொண்டுள்ளமையானது இயற்கையிலேயே இநதக் குளங்களின் பாதுகாப்பை உறுதியாக வைத்துள்ளது.

வவுனியாவின் குடியிருப்பு பாரம்பரியமாக வன்னியர்களைக் கொண்டு உருவானதாக நான் கேகள்விப்பட்டிருக்கிறேன். அதன் பாரம்பரியத்திற்கு பண்டாரிகுளம் புளியங்குளம் என்பவை தொடர்புடைய குடியிருப்புகளாகும். இவர்களே முதன்மையான விவசாயத்தை செய்து வந்தவர்கள் என்பதும் இன்றும் மாப்பாணமுதலி பரம்பரைக்கான தனிச்சுடலையும் இந்த குளத்தின் வயல் வெளியை அண்டி அமைந்துள்ளது.

இன்றைய புதிய தலை முறையினர் ஏராளமாக வெளிநாடுகளில் வாழ்ந்தாலும் வவுனியாக் குளத்தின் கீழான நெற்செய்கையில் எந்த குறைவும் இல்லாமல் நடைபெறுகிறது.

குளத்தின் அமைவிடம் பற்றி விபரிக்கையில், இது வவுனியன் என்பவரால் கட்டப்பட்டமையால் வவுனியன் குளமாக அழைக்கப்பட்டதாக எனது பாட்டனார் கூறியுள்ளார். சுப்பிரமணிய வவுனியன் காலத்தில் இது வவுனியாக்குளமாக மாறியது. இன்றும் எமது தோம்புகளில் விளாங்குளம்கிழக்கு மூலை தெற்கு எனவே குறிக்கப்பட்டிருந்தமையும் சான்றாகும்.

இதன் தெற்கெல்லையாக கொறவப் பொத்தான வீதியும் மேற்கெல்லையாக குளக்கட்டும் தெற்கெல்லையாக வவுனியா நகரிலிருந்து மாமடுச் சந்திவரையுள்ள வீதியும் அமைகின்றது. இந்த வீதியின் மருங்கே இரண்டொரு கடைகள் இருந்தன. இதன் பரப்பெல்லை மிக பெரியது. பூந்தோட்டம் காத்தார் சின்னக்குளம் நெடுங்குளம் செல்லும் வீதி என்பன வடக்கெல்லையாக இருந்தாலும் தொலைவில் தெரியும் மலைத்தொடர் இந்தக் குளத்தின் பேரழகுக்கு ஒரு மெருகூட்டுவதாகும்.

இதைப்பற்றி விபரிப்பதாயின், ஓமந்தைக்கு வடக்கே சேமமடுவின் பின்னதாக பெரிய புளியங்குளம் என்னும் இடத்திலும் தொடங்கி இந்த குன்றுகள் மடுக்கந்தைக் குளத்தையும், கட்டையும் பாதுகாப்பது போல இதன் இன்னுமொரு தொடரே ஈறற் பெரியகுளம் வரை படர்ந்து உள்ளது. மரங்களை தாங்கிநிற்கும் வேர்களைப்போல இந்தக் குன்றுகளும் ஆங்காங்கே உயர்ந்தும் செங்குத்தாகவும் பரந்து நிற்பதை அறியலாம். வவுனியா மாவட்டத்தின் நிலத்தின் கீழ் படர்ந்திருக்கும் பாறைகளின் பயன்பற்றி பின்னர் பார்ப்போம்.

வவுனியாக்குளம் தன்னெல்லையக தாண்டிக்குளம் வரையுள்ள நிலங்களையும் வவுனியா அரசினர் பண்ணையின் ஒரு பகுதிக்குமான நீரை தருகிறது. மேலதிக நீர் தாண்டிக்குளம் வழியாக பெருமளவான விளை நிலங்களுக்கு பாசனமாகிறது.

வவுனியா நகரத்தை அண்டி இருக்கும் இந்தக்குளம் ஒருகாலத்தில் ஏராளமான மக்களின் சுய தேவைகளைப் பூர்த்தி செய்தது. ஆனால் காலப்போக்கில் அரச உள்ளூராட்சி நிர்வாகத்தினரின் அலட்சியப் போக்கால் இந்தியாவின் கூவம் நதியைப் போல மாறி வருகிறது. நகரத்தின் ஒட்டு மொத்த கழிவுகளும் கால்வாய்களூடாக குளத்தை வந்தடைகின்றன.

ஆயினும் குளத்தின் நீர் மாசடையாமல் நீர் வெளியேற்றப்பட்டு பயிர்ச் செய்கைக்கு பயன்பட்டது. இன்று நகரத்தின் பெருக்கத்தால் குளத்தின் மேலான கழிவுகள், எதுவித தேக்கமுமின்றி குளத்தில் பாய்ந்தன.



தயாரிப்பர். குளம்நிரம்பி அது மற்றும்வரை அதிலிருந்து பிடிக்கப்படும் மீன்கள் ஒரு பெரிய வருவாயை தருகிறது. அதைவிட குளம் வற்றிவிடுகின்ற காலத்தில் அடியில்காய்ந்து உருவாகும் குளப்பொருக்கே சுட்டிபானை செய்யும் மக்கள் ஏற்றிச் செல்வார்கள். வருடம் முழுதுக்குமான மண்ணை அவர்கள் கோடையில் சேர்த்தாக வேண்டும். . ஏனைய பொருக்குகளும் விவசாயிகளால் ஏற்றிச் செல்லப்பட்டு அவர்களது வயலில் பசளையாக பரவி விடப்படும்.

இன்றைய விவசாயிகள் இரசாயன உரங்களுக்காக செலவிடும் பணத்தை இந்த வகை இயற்கை பசளைகளுக்கு செலவிடுவதில்லை. இந்த வகையில் குளத்தை பராமரித்தால் குளம் தூர்வடையாமல் இருக்கும் இருந்திருக்கும். ஆனால் இன்றைய வவுனியா நகரின் கழிவுகளுக்காக யந்திரங்கள் மூலமாக கழிவுகள் நடுக்குளத்தில் சேர்க்கப்படுவதை காண்கிறோம். ஒரு அருமையான உல்லாசப் பயணத்தலமாக மாற வேண்டிய குளவெளி இப்படி பாழாய்க்கிடக்கிறது. குளங்கள் என்பவை பாசனத்துக்காகத்தான் என்றல்ல. அதன் உபரி வருமானங்கள் அந்த குளத்தையண்டி குடியிருக்கும் மக்களுக்கானதுமாகும். அந்த சூழலில் உள்ள நிலத்தடி நீரை பாதுகாப்பதும் குளங்கள்தான்.

இன்று அப்படி பாய்வதில்லை என்பதுடன் குளம் உயர்ந்தும், கடைத்தெரு தாழ்ந்தும் போயுள்ளது. காரணம் குளங்களை ஆக்கிரமித்து வீடுகட்டுவோர் தமது நிலங்களை நீர் புகாமல் உயர்த்தி உயர்த்தி கொட்டிய மண் பெருமழை வரும் போது அரித்துக்கொண்டு நடுக்குளத்தில் சேருகிறது. இதனால் குளம் தூர்வடைந்து போயிற்று. மேலும் சுற்றாடலில் கொட்டப்பட் பெருமளவிலான அரிசி ஆலைகளின் கழிவுகளும் குளத்தையே குறிவைத்து நிரவுகின்றன.

ஒரு காலத்தில் குளம் வற்றும் போது குளத்தை தூர்வை வாருதல் முறையாகும். ஆனால் அப்படி மண்ணை கோரி வருபவர்களுக்கு மண்ணை அள்ளுவதற்கான அனுமதியை நகரசபை கொடுக்க வேண்டும். குளத்தின்நடுப்பகுதியில் மண் அள்ள விடாமல் குளத்தின் வான் பகுதியை பாதிக்கும் நோக்கத்தில் கரையோரத்திலேயே மண் அள்ள அனுமதி கொடுப்பார்கள். இது எதனால் என்பது எனக்கு புரிவதில்லை விளைவாக குளத்தில் நீர் நிரம்பு முன்பாகவே நீர் தாழ்த்தப்பட்ட பகுதியூடாக வெளியேற ஆரம்பித்துவிடும். பின்னர்தான் அதன் ரகசியம் புரிந்தது பெருமளவு செல்வந்தர்களின் நிலங்களை பாதுகாப்பதே நோக்கம் என்று அறிந்தபோது தமிழர்களுக்கு விமோசனமே கிடையாது என அறிந்து வருந்தத்தான் முடிந்தது.

வவுனியாக்குளத்திற்கு சின்னப்புதுக்குளம் வெளிக்குளம் நம்பைக்குளம் போன்ற குளங்களே நீரை கொண்டு வருகின்றன. என்றால் அவைகளும் முற்றாக மூடப்படவுள்ளதாகவே குடியேற்றம் நடந்துள்ளது. குறிப்பாக நம்பைக்குளம் வயல்வெளியில் பாரிய அளவு நெல்வயல்கள் மண்கொட்டி நிரவப்பட்டு கட்டடங்கள் கட்டப்படுகின்றன. அந்த கட்டடங்களை மீறி ஒரு காலத்தில் நீர் வெளியே வர முடியாமல் குடிமனைகளுக்குள் பாயப்போகிறது என்பதையிட்டு யாருக்கும் கவலையில்லை.

பெருமளவு படித்த சமூகத்தினரே இந்த ஆக்கிரமிப்பை செய்துள்ளமையானது. அவர்களின் சந்ததிக்காக நிலத்தைப் பிடித்தவர்கள் அவர்களில் வாழ்வாதாரத்தை அழிப்பதைப்பற்றி கொஞ்சமும் சிந்திக்கவில்லை என்பதையே காட்டுகிறது.

வவுனியாக் குளத்தின் நீர்ப்பரப்பில் தாமரைக் கொடிகள் பரவியிருந்தது ஒரு காலம். அக்காலத்தில் குளம் வற்றுகிறபோதெல்லாம் தாமரைக் கிழங்கு கிண்டி விற்கும் கூலித் தொழிலாளர்கள் குடும்பம் குடும்பமாக காலையிலிருந்து கிழறும் தாமரைக் கிழங்குகளை சேர்ப்பார்கள். மாலையில் சந்தை வியாபாரிகளின்வாகனங்கள்வந்து அவற்றை கொள்வனவு செய்வதை காணமுடியும். தாமரைக்காய்களை காயவைத்து மாவாக்கி பக்குவப் படுத்தி அதிலிருந்து உணவு



# உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் தகவல்களை பகிர்வதற்கான புதிய விதிகள்

## பகுதி - 01

### இலங்கை நிறுவனங்களுக்கான புதிய தகவல் பகிர்வுத் தேவைகள்

### New Information Sharing Requirements for Sri Lankan Institutions

அனைத்து வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் அரசு நிறுவனங்களுக்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் அறிவிப்பு.

இலங்கையின் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் (IRD) மார்ச் 21, 2024 திகதி யிட்ட அதிவிசேட வர்த்தமானி எண். 2376/25 தொடர்பான அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இந்த அறிவிப்பு பல்வேறு நிறுவனங்களை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்துடன் (CGIR) வழக்கமான தகவல்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று அறிவித்துள்ளது. அதன் அடிப்படையில்,

**என்ன தகவல் பகிரப்படுகின்றது?**

21.03.2024 திகதியிட்ட அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 2376/25 இன் படி, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 123(8) பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட உள்நாட்டு வருமான (திருத்தம்) சட்டம், இல. 4 இன் மூலம் திருத்தப்பட்டது. 2023, நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர், உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையர் (CGIR) வழக்கமான அடிப்படையில் தகவல்களைப் பகிருமாறு பரிந்துரைத்துள்ளார்.

அரசாங்க நிறுவனங்கள் உட்பட நபர்கள் CGIR க்கு வர்த்தமானி அறிவிப்பின் அட்ட வணை ஐ இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவலை, அட்டவணை ஐஐ இன் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, இணைய அடிப்படையிலான தளம் அல்லது ஊபுஐசு ஆல் அங்கீகரிக்கப்பட்ட பிற மின்னணு தளம் மூலம் வழங்க வேண்டும். இணைய அடிப்படையிலான இணைப்பு/பரிமாற்ற முறை பின்னர் தெரிவிக்கப்படும்.

மேற்படி வர்த்தமானி அறிவித்தலின் படி, பின்வரும் நபர்கள்/அரசு நிறுவனங் கள் அத்தகைய தகவல்களை அளிக்க வேண்டும்.

1. பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் பதிவாளர் நாயகம்.




The Registrar General of the Registrar General's Department.

2. நிறுவனங்களின் பதிவாளர் திணைக் களத்தின் நிறுவனங்களின் பதிவாளர் நாயகம்.

The Registrar General of Companies of the Department of the Registrar of Companies.

3. மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம்.

The Commissioner General of Motor Traffic of the Department of Motor Traffic.

4. பொருட்கள், வேலைகள் அல்லது ஆலோசனை மற்றும் ஆலோசனை அல்லாத சேவைகளை வழங்குவதற்கான ஒப்பந்தங்களை வழங்குவதற்கு பொறுப்பான எந்தவொரு அரசாங்க நிறுவனத்தின் அதிகாரிகள்.

Officers of any Government Institution in charge of granting contracts for the supply of goods, works, or consulting and non - consulting services.

5. இலங்கை மத்திய வங்கியால் ஒழுங்குபடுத்தப்படும் வங்கிகள் மற்றும் வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள் உட்பட எந்தவொரு நிதி நிறுவனமும்.

Any Financial institution including banks and non - banking financial institutions regulated by the Central Bank of Sri Lanka.



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

6. கொழும்பு பங்குச் சந்தையின் தலைவர்.

Chairman of Colombo Stock Exchange.

பகிரப்பட வேண்டிய தகவலின் குறிப்பிட்ட விபரங்கள் வர்த்தமானி அறிவிப்பின் அட்டவணை ஐ இல் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன, அதில் பின்வரும் விபரங்கள் சமர்ப்பிக்க வேண்டியிருக்கும்:

- நிலம்/சொத்து உரிமை: இதில் உரிமையாளர்களின் பெயர்கள், தேசிய அடையாள இலக்கம் மற்றும் சொத்து பரிமாற்ற விபரங்கள்.
- நிறுவனப் பதிவுகள்: நிறுவனப் பதிவாளர் துறையின் தகவல்கள் சேர்க்கப்படலாம்.
- வாகன உரிமை: மோட்டார் போக்குவரத்துத் துறையின் தரவு பகிரப்பட்ட தகவலின் ஒரு பகுதியாக காணப்படலாம்.
- அரசாங்க ஒப்பந்தங்கள்: பொருட்கள், சேவைகள் மற்றும் ஆலோசனைப் பணிகளுக்காக அரசு நிறுவனங்களால் வழங்கப்பட்ட ஒப்பந்தங்களின் விவரங்கள் போன்றன.
- நிதி பரிவர்த்தனைகள்: இலங்கை

மத்திய வங்கியால் ஒழுங்குபடுத்தப்படும் வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்கள், நிதி பரிவர்த்தனைகள் பற்றிய தகவல்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டியிருக்கலாம்.

• பங்குச் சந்தை நடவடிக்கை: கொழும்பு பங்குச் சந்தையின் தரவுகள் இதில் சேர்க்கப்படலாம்.

Q-தகவல் எவ்வாறு பகிரப்படும்?

இணைய அடிப்படையிலான தளம் அல்லது CGIR ஆல் அங்கீகரிக்கப்பட்ட மற்றொரு தளம் மூலம் தகவல் மின்னணு முறையில் பகிரப்படும். குறிப்பிட்ட தளம் மற்றும் சமர்ப்பிக்கும் முறை பின்னர் அறிவிக்கப்படும்.

Q-இது எப்போது நடைமுறைக்கு வரும்?

தகவல் பகிர்வு தேவை ஜூலை 1, 2024 முதல் அமுலாகும்..

Q- பொது மக்களுக்கு எந்த வகையில் நன்மைகள்?

• மேம்படுத்தப்பட்ட வரி வசூல்: பரந்த அளவிலான தரவுகளை அணுகுவதன் மூலம், ஐசுனு ஆனது சாத்தியமான வரி ஏய்ப்பாளர்களை அடையாளம் காணவும் மற்றும் வரி வசூல் திறனை மேம்படுத்தவும் முடியும். இது பொது சேவைகளுக்கான அரசாங்க வருமானத்தை அதிகரிக்க வழிவகுக்கும்.

• குறைக்கப்பட்ட வரிச் சுமை: மேம் படுத்தப்பட்ட வரி வசூல் நீண்ட காலத்திற்கு இணக்கமான வரி செலுத்துவோருக்கு குறைந்த வரிச் சுமையை ஏற்படுத்தும்.

• நிதிக் குற்றங்களை எதிர்த்துப் போராடுதல்: நிதிப் பரிவர்த்தனைத் தரவைப் பகிர்வது பணமோசடி மற்றும் பிற நிதிக் குற்றங்களைக் கண்டறிந்து தடுப்பதற்கு உதவும்.

Q- பொது மக்களுக்கு எந்தவகையில் பாதகங்கள் காணப்படுகின்றது?

• தனியுரிமைக் கவலைகள்: சொத்து உரிமை விவரங்கள் மற்றும் நிதி பரிவர்த்தனைகள் போன்ற தனிப்பட்ட தகவல்களைப் பகிர்வது தனியுரிமைக் கவலைகளை எழுப்புகின்றது. இந்தத் தகவலைப் பாதுகாக்க வலுவான தரவுப் பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும்.

• அதிகரித்த ஆய்வு: வணிகங்கள் மற்றும் தனிநபர்கள் வரி அதிகாரிகளிடமிருந்து கூடுதல் ஆய்வுகளை எதிர்கொள்ள நேரிடலாம், இது கூடுதல் இணக்கச் செலவுகளுக்கு வழிவகுக்கும்.

• தவறாகப் பயன்படுத்துவதற்கான சாத்தியம்: சேகரிக்கப்பட்ட தகவல்கள் வரி அல்லாத நோக்கங்களுக்காக தவறாகப் பயன்படுத்தப்படுவதற்கான தொலைதூர வாய்ப்பு உள்ளது.

இந்தப் புதிய தகவல் பகிர்வுத் தேவை வரி வசூலை மேம்படுத்துவதற்கும் நிதிக் குற்றங்களை எதிர்த்துப் போராடுவதற்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது. இருப்பினும், தனியுரிமைக் கவலைகளை நிவர்த்தி செய்ய வலுவான தரவு பாதுகாப்பு நடவடிக்கைகளை செயற்படுத்துவது முக்கியம். சேகரிக்கப்பட்ட தகவல்கள் முறையான வரி நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படுவதையும், தவறாகப் பயன்படுத்தப்படாமல் இருப்பதையும் அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும். பொது மக்களுக்கு, இந்த அறிவிப்பின் தாக்கம் தரவு எவ்வளவு திறம்பட நிர்வகிக்கப்படுகின்றது மற்றும் பாதுகாக்கப்படுகின்றது என்பதைப் பொறுத்தது. சில கூடுதல் ஆய்வுகள் இருக்கலாம் என்றாலும், மிகவும் திறமையான வரி முறை நீண்ட காலத்திற்கு அனைவருக்கும் பயனளிக்கும்.

## அரசு மற்றும் கொள்கை வகுப்பாளர்களுக்கான நன்மைகள்

புதிய தகவல் பகிர்வு தேவைகள் இலங்கை அரசாங்கத்திற்கும் கொள்கை வகுப்பாளர்களுக்கும் பல நன்மைகளை வழங்குகின்றன:

• மேம்படுத்தப்பட்ட வரி வருவாய் சேகரிப்பு: பரந்த அளவிலான தரவுகளை அணுகுவதன் மூலம், ஐசுனு ஆனது சாத்தியமான வரி ஏய்ப்பாளர்களை மிகவும் திறமையாக அடையாளம் காண முடியும். இது அதிகரித்த வரி வசூலுக்கு வழிவகுக்கின்றது, இது பொதுச் சேவைகள், உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் சமூக திட்டங்களுக்கு அதிக அரசாங்க வருவாயை மொழிபெயர்க்கின்றது.

• மேம்படுத்தப்பட்ட கொள்கை உருவாக்கம்: சேகரிக்கப்பட்ட தரவு பொருளாதார செயல்பாடு, சொத்து உரிமை, நிதி பரிவர்த்தனைகள் மற்றும் அரசாங்க ஒப்பந்தங்கள் பற்றிய மதிப்புமிக்க நுண்ணறிவுகளை வழங்க முடியும். வரிவிதிப்பு, பொருளாதார மேம்பாடு மற்றும் சமூக நலன் போன்ற துறைகளில் மேலும் தகவலறிந்த மற்றும் இலக்கு கொள்கைகளை உருவாக்க இந்தத் தகவல் பயன்படுத்தப்படலாம்.

• குறைக்கப்பட்ட நிர்வாகச் சுமை: நெறிப்படுத்தப்பட்ட தரவு சேகரிப்பு அரசாங்க நிறுவனங்களின் நிர்வாகச் சுமையைக் குறைக்கும். தகவலுக்கான பல கோரிக்கைகளை நம்புவதற்குப் பதிலாக, ஐசுனு ஆனது ஒரு மையப்படுத்தப்பட்ட தளத்திலிருந்து தரவை அணுகலாம், நேரத்தையும் வளங்களையும் மிச்சப்படுத்துகின்றது.

• மோசடி மற்றும் ஊழலை எதிர்த்தல்: அதிகரித்த நிதி பரிவர்த்தனை தரவு வெளிப்படைத்தன்மை சந்தேகத்திற்குரிய செயல்பாட்டை அடையாளம் காணவும் பணமோசடி, வரி ஏய்ப்பு மற்றும் ஊழலைத் தடுக்கவும் உதவும். இது ஒரு நியாயமான மற்றும் வெளிப்படையான வணிகச் சூழலை வளர்க்கின்றது.

• திட்டங்களின் சிறந்த இலக்கு: சொத்து உரிமை மற்றும் நிதி பரிவர்த்தனைகள் பற்றிய தரவுகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம், சமூகப் பாதுகாப்பு வலைகள் மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களைத் தேவைப்படுபவர்களுக்கு அரசாங்கம் சிறப்பாக இலக்கு வைக்க முடியும்.

ஒட்டுமொத்தமாக, புதிய தகவல் பகிர்வுத் தேவைகள், வரி வசூலை மேம்படுத்துவதற்கும், சிறந்த கொள்கைகளை உருவாக்குவதற்கும், நிதிக் குற்றங்களை எதிர்த்துப் போராடுவதற்கும் இலங்கை அரசாங்கத்திற்கு ஒரு சக்திவாய்ந்த கருவியாக இருக்கும். இது மிகவும் திறமையான மற்றும் சமமான பொருளாதாரத்திற்கு வழிவகுக்கும்.

புதிய தகவல் பகிர்வுத் தேவைகளை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசாங்கம் பல உண்மையான சவால்களை எதிர்கொள்ளும். அவ்வாறான சவால்கள் சிலவற்றைப் பார்ப்போம்

## தரவு தரநிலைப்படுத்தல் மற்றும் ஒருங்கிணைப்பு:

• சீரற்ற தரவு வடிவங்கள்: வெவ்வேறு நிறுவனங்கள் தங்கள் தரவை வெவ்வேறு வடிவங்களில் பராமரிக்கலாம். இந்தத் தரவை IRD அணுகுவதற்கான ஒரே தளமாக ஒருங்கிணைக்க, வடிவங்களைத் தரப்படுத்தவும் தடையற்ற தரவுப் பரிமாற்றத்தை உறுதி செய்யவும் குறிப்பிடத்தக்க முயற்சி தேவைப்படும்.

• தரவுத் தரச் சிக்கல்கள்: பல்வேறு நிறுவனங்கள் வைத்திருக்கும் தரவுகளின் துல்லியம் மற்றும் முழுமை மாறுபடலாம். ஐசுனு ஆல் பெறப்படும் தகவல்கள் நம்பகமானவை என்பதை உறுதிப்படுத்த, தரவு தரச் சோதனைகள் மற்றும் சுத்தம் செய்யும் செயன்முறைகளை அரசாங்கம் செயற்படுத்த வேண்டும்.

## தொழில்நுட்ப உட்கட்டமைப்பு:

• இயங்குதளத்தை உருவாக்குதல்: தரவுகளின் அளவு மற்றும் உணர்திறனைக் கையாள பாதுகாப்பான மற்றும் திறமையான இணைய தளத்தை உருவாக்குவது மிகவும் முக்கியமானது. இதற்கு தொழில்நுட்பம் மற்றும் நிபுணத்துவத்தில் முதலீடு தேவை.

• சைபர் பாதுகாப்பு கவலைகள்: சேகரிக்கப்பட்ட தனிப்பட்ட மற்றும் நிதித் தரவுகளின் பரந்த அளவைப் பாதுகாப்பது மிக முக்கியமானது. தரவு மீறல்கள் மற்றும் அங்கீகரிக்கப்படாத அணுகலைத் தடுக்க, வலுவான இணையப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் அரசாங்கம் முதலீடு செய்ய வேண்டும்.

# தன்னம்பிக்கைப் பெண் –சோதிலிங்கம் துர்க்கா தேவி

## நேர்கண்டவர் - ஞானம் கவினி

**துர்கா ஒரு சிறந்த முற்போக்குவாதி, எதையுமே முடியாது என்று சிந்திக்காத ரகம்... தான் மாத்திரம் அன்றி தன்னைச் சூழ இருப்பவர்களையும் நம்பிக்கையோடு வழிநடத்தக்கூடிய ஆளுமை மிக்க சிறந்த பெண் தொழில் முயற்சியாளர்.**

இலங்கையின் முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரதான பகுதிதான் புதுக்குடியிருப்பு, அழகும் வளமும் நிறைந்து கிடக்கும் இந்த பிரதேசத்தின் வனப்பயெல்லாம்அளைந்தபடி வளர்ந்தவள் தான் சோதிலிங்கம் துர்கா தேவி,

காடும், விளை நிலமும் ,எட்டிப் பார்த்தால் முல்லை கடலும் தெரியும் புது குடியிருப்பின் இதயத்தில் இருந்து தேசத்தின் கனவுகளை நெஞ்சத்தில் சுமந்து கொண்டு பறந்து திரிந்தவள் துர்க்கா..

சிறுபிள்ளை பராயத்திலேயே துடிப்பும் ஆர்வமும் மிக்க இவளுக்கு எதையும் சாதித்து விட வேண்டும் என்கின்ற அவாவும் போர்க்குணமும் தானாகவே மலர்ந்து விட்டவை என்று தான் சொல்ல வேண்டும்.

கல்வியிலும் இதர துறைகளிலும் மிகச் சிறப்பாக தனக்கென ஒரு தனி இடத்தை தக்க வைத்துக் கொண்டிருந்த துர்காவை காலம் களத்திற்கு அழைத்து இருக்கிறது .

2008 ஆம் ஆண்டு அவளது 24 வயதில் தனது உடலின் பாகங்களின் அனேக இயங்கு தளங்கள் முடக்கப்பட்டு போக , வித்தியாசமாக துர்காவின் தன்னம்பிக்கையும்நெஞ்சுரமும்அதிகமாகிப் போயிருக்கிறது.

போரிலே கையொன்றையும் முழுமையாக இழந்த போதிலும் தன் னம்பிக்கையை இறுகப் பற்றிய படி இந்த உலகத்தின் அத்தனை சவால்களுக்கு முகம் கொடுத்து இன்று பல பெண்களுக்கு எடுத்துக்காட்டாகவும்மாற்றுத்திறனாளிகளின் மனோ பலமாகவும் நிமிர்ந்து நிற்கிறாள் சோதிலிங்கம் துர்கா தேவி.

இரண்டு கைகளும் சரியாக இருக்கும் பலர் பல விடயங்களுக்கு சிரமப்படும் பொழுது ,தனது ஒரு கை மற்றும் சிதைக்கப்பட்ட பல உடல் பாகங்களோடு இன்னும் உத்வேகத்தோடு இயங்கிக் கொண்டிருக்கும் இவளிடம் நீங்கள் இந்த சமூகத்தில் எதிர்கொண்ட சவால்களைப் பற்றிய கூறுங்கள்? என்று வினாவினோம்.

சிறுவயதிலிருந்தே விடாமுயற்சியும் ஏதாவது செய்து விட வேண்டும் என்ற ஆர்வமும் எனக்குள் இயல்பாகவே இருந்திருக்கிறது என்றுதான்நினைக்கிறேன். எனது உடலில் காயங்கள் ஏற்படுவதற்கு முன்பே நான் தையல்சார்ந்த பல துறைகளில் ஓரளவு தேர்ச்சி பெற்றிருந்தேன்.




ஏற்கனவே நான் பெற்றுக் கொண்ட பயிற்சிகள் எனது கையை இழந்ததற்கு பின்பான கால பகுதிகளில் எனக்கு பெரிதும் உதவியாக இருந்தது.

ஆனால் ஆரம்பத்தில் இருந்ததைப் போல கையை இழந்ததற்கு பின்பான காலம்அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை .ஒவ்வொரு வேலைகளையும்மிகவும்நுட்ப


சோதிலிங்கம் துர்க்கா தேவி

மாகவும் அதே சமயம் அவதானத்துடனும் செய்ய வேண்டியதாக இருந்தது .

மிகவும் சிரமத்தின் மத்தியில் நான் ஆரம்பத்தில் இருந்து மீண்டும் தையல் மற்றும் தையல் சார்ந்த இதர வேலைகளை ஒரு கையால் செய்ய பழகிக் கொண்டேன்.

அதனால் எனது தேவைகளை நானே நிறைவேற்ற கூடிய அளவுக்கு பொருளாதார பலமும் எனக்கு கூடுதலாகவே கிடைத்தது.

சவால்கள் இல்லாத உலகம் சலிப்பாக மாறிவிடும். உண்மையைச் சொல்வதாக இருந்தால் என்னை ஊக்கப்படுத்தி உற்சாகப்படுத்தியவர்களை விட என்னை காயப்படுத்தியவர்கள் மற்றும் ஏளனப்படுத்தியவர்கள் மூலமாகவே நான் என்னை வளர்த்துக் கொண்டேன்.

ஒவ்வொரு தடவையும் அவமானப்படும் பொழுதெல்லாம் மிகவும் உத்வேகத்தோடு எனது வேலைகளை நானே செய்வதற்கு ஆரம்பித்தேன் .அது மாத்திரம் அன்றி பொருளாதாரத்தை ஸ்தித்திரப்படுத்தும் ஒவ்வொரு தொழில்களையும் மிகவும் திட்டமிட்டு நிதானமாக பழகிக் கொண்டேன்.

தையல் மற்றும் குழந்தைகளுக்கான கம்பளி ஆடைகளை பின்னுதல், பெண்களுக்கான ஆடைகளை

வண்ணமயப்படுத்தும் ஆரி போன்ற கைவேலைகளை மிகவும் ஆர்வத்தோடு செய்ய ஆரம்பித்தேன். இதனை முறையாக கற்றுத் தேர்வதற்காக இந்தியாவில் உள்ள ஒரு கல்லூரியில் இணைய வழி மூலம் முழு பயிற்சிகளையும் பெற்றுக் கொண்டேன். இந்த பயிற்சியில் நான் தேர்ச்சி அடையும் வரை நான் ஒரு மாற்றுத்திறனாளி என்பது யாருக்கும் தெரிந்திருக்கவில்லை. எல்லோரையும் போலவே என்னாலும் எதையும் செய்ய முடியும் என்கின்ற மனோ தைரியம் என்னை வழிநடத்துகின்றது என்று நம்பிக்கையோடு சிரிக்கிறார்.

2009 ஆம் ஆண்டு இலங்கையின் போர் முடிவுக்கு வந்த பொழுது எனது வாழ்க் கையிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டது, உடல் முழுதும் காயங்களுடனும் வலிகளுடனும் புலம்புயர்ந்து 2012 ஆம் ஆண்டு லண்டன் தேசத்துக்கு அகதியாக வந்து சேர்ந்தேன்.

இங்கேயும் என்னால் முடிந்த அளவுக்கு சொந்தமாக ஏதாவது தொழில் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில்

தையல் ,ஆரி ஒர்க் ,கம்பளிச்சட்டை, கேக், உணவு பண்டங்கள் தயாரித்தல் மாத்திரமன்றி, ஆரோக்கியமான திரிபோசா போன்ற உற்பத்திகள் மற்றும் தலைமுடி வளர்ச்சிக்கான தைலம் போன்றவற்றை சொந்த முயற்சியோடு உற்பத்தி செய்து விற்பனை செய்தும்வருகிறேன் என்கிறார்.

லண்டனில் தனக்கான ஒட்டுனர் அடையாள அட்டையை பெற்றுக் கொண்டு மிக லாவமாக வாகனத்தை செலுத்துகின்ற துர்காவின் கண்களில் நம்பிக்கையின் ஒளி மின்னிக்கொண்டிருக்கிறதை அந்த கேமரா கண்களோடு காணக்கூடியதாக இருக்கின்றது.

துர்கா ஒரு சிறந்த முற்போக்குவாதி, எதையுமே முடியாது என்று சிந்திக்காத ரகம்... தான் மாத்திரம் அன்றி தன்னைச் சூழ இருப்பவர்களையும் நம்பிக்கையோடு வழிநடத்தக்கூடிய ஆளுமை மிக்க சிறந்த பெண் தொழில் முயற்சியாளர்.

இவரது உற்பத்திகளுக்கு லண்டனில் நல்ல வரவேற்பு கிடைத்திருக்கின்றது. ஆரம்பத்தில் தனது குடும்பத்திற்காக உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் நண்பர்கள் வட்டத்தையும் தாண்டி இன்று பல்வேறு பட்டவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது என்கிறார்.

சுய தொழில் என்பது ஒவ்வொரு பெண்ணுக்கும் எத்துணை பெரிய சக்தி என்பதை தனது ஒவ்வொரு செயற்பாடுகளின் ஊடாகவும் சொல்லி நிற்கிறார் துர்க்கா தேவி.

துர்காவின் வீடு கட்டடத்தின் முதலாவது மாடியில் இருக்கிறது. ஆனால் அங்கே புதுக்குடியிருப்பு கிராமத்தில் வளர்ந்திருக்கும் அத்தனை கீரை வகைகளும் அத்தோடு பயன் தரும் மரக்கன்றுகளும் பசுமையாக பயன் அளித்து கொண்டு இருக்கிறது.

துர்காவின் வீட்டிற்கு வருபவர்கள் எல்லாம் இவரது வீட்டு தோட்டத்தின் மேல் எப்போதும் ஒரு கண் வைத்திருப்பார்கள் என்று தான் தோன்றுகிறது அத்தனை அழகாக தனது தோட்டத்தை பராமரிக்கிறார் துர்க்கா தற்போது தனது வீட்டு தோட்டத்தில் அழகாக வளர்ந்திருக்கும் தூதுவளையில் இருந்து கன்றுகளை பதியம் வைத்து

விற்பனை செய்வதிலும் அக்கறை காட்டுகிறார்.

எப்போதும் தன்னம்பிக்கையோடும் முகமலர்ச்சியோடும் பேசும் துர்கா விடம் எமது பெண்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்குகளில் இணைய வழி மூலம் கலந்து கொள்ள முடியுமா என்று வினவிய போது மிகவும் ஆர்வத்தோடு சம்மதிக்கும் துர்க்கா பல பெண்களது வாழ்வில் ஒரு உந்து சக்தியாக இருப்பார்.

காலையில் எழுந்து பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவது கணவனை வேலைக்கு அனுப்புவது தான் தனது வீட்டு வேலைகளை முடித்துவிட்டு பலருக்கு உதவுவது என்று சுறுசுறுப்பாக சுழன்று கொண்டிருக்கும் இவரிடம் ,

உங்களது இத்தனை தன்னம்பிக்கைக்கும் உங்களுடைய குடும்பத்தினர் எவ்வாறு பங்களிக்கின்றனர் ?என்று வினவினோம்.

அதற்கு தொலைபேசியில் கலகலவென்று சிரித்தபடி , எதற்காகவும் நான் எப்போதும் யாரையும் எதிர்பார்த்து நின்றது கிடையாது .ஆனால் நான் எதிர்பார்க்கும் அத்தனை விடயங்களிலும் எனக்கு சகல நம்பிக்கையையும் எனது கணவரும் பிள்ளைகளும் வழங்குகின்றனர் .

எப்போதும் அவர்கள் என்னை ஒரு மாற்றுத்திறனாளியாக உணர்ந்தது கிடையாது ,பிறந்ததிலிருந்து எனது குழந்தைகள் என்னை இவ்வாறு பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அதனால்அவர்களுக்குஎன்னை ஓர் விசேட தேவையுடைய தாயாக அடையாளம் காண முடியவில்லை .எப்போதும் எல்லோரையும் போலவே அவர்கள்என்னைநடத்துவதால் எனக்கும் மனதளவில் எந்தவிதமான சோர்வுகளும் ஏற்பட்டது இல்லை , இன்று வரைக்கும் நான் என்னை வளர்த்துக் கொள்ளும் அத்தனை சந்தர்ப்பங்களையும் உருவாக்கிக் கொடுத்திருக்கின்றனர்என்குடும்பத்தினர் என்று மகிழ்ச்சியோடு சொல்கின்றார்.

உங்களைப் போல எமது தேசத்தில் வாழும் உங்களுடைய சகோதர சகோதரிகளுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள் ?என்று கேட்டபோது

எந்த ஒரு விடயத்திற்குமே மாற்று வழி என்பது எப்போதும் இருக்கும் ,அதனை நாங்கள் தேடி கண்டுபிடித்துக் கொள்ளும் வரை தான் நாங்கள் மாற்றுத்திறனாளிகள். எங்களுக்கான மாற்று வழிகளை நாங்கள் கண்டுபிடித்து விட்டால் எல்லோரையும் போல எங்களாலும் இயங்க முடியும் என்பதை நாங்கள் உணர்ந்து கொள்ள தொடங்கி விடுவோம் ,அப்போது எங்களை நாங்களே ஒரு நம்பிக்கை உள்ள மனிதர்களாக மாற்றி அமைத்துக் கொள்ள முடியும்.

சாதாரணமாக அங்கங்களில் எந்தவித குறைபாடுகளும் இல்லாத பலரே இன்று வீடுகளுக்குள் முடங்கி கிடக்கின்றனர். இன்னொருவரில் தங்கி வாழாத வாழ்க் கையை வாழ்வதற்கு எல்லோரும் பழகிக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாக இருக்கின்றது.

குறிப்பாக பெண்கள் சொந்த நாட்டிலும் சரி நாடு கடந்து வாழ்ந்தாலும் சரி தமக்கான தேவைகளை தான் நிறைவேற்றிக் கொள்வதற்கான சகல வழிகளையும் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

நாம் வாழுகின்ற இடத்தில் நமக்கான ஒரு வாழ்க்கையை தகவமைத்துக் கொள்ள வேண்டிய கடப்பாடு நமக்கு முக்கியமாக இருக்கின்றது .ஆகவே ஒவ்வொருவரும் நாங்கள் நமக்கான அங்கீகாரத்துடன் வாழ வேண்டும் என்று சொன்னால் இன்னொருவரில் தங்கி வாழாத முற்றுமுழுதாக இன்னொருவரை சார்ந்து விடாத நிலையை உருவாக்கிக் கொள்ள வேண்டும். என்று கலகலப்பாக பேசிக் கொண்டிருக்கும் இவரிடம் இருந்து நம்பிக்கையுடனும் மகிழ்ச்சியுடனும் விடை பெற்றுக் கொண்டோம்.



# வயல்அறுவடை விழா – 2024

**விவசாயி குணாவின் கருத்துப்படி Bg 366 மூன்றரை மாத வெள்ளையின நெல்லில் ஏக்கருக்கு 40 மூடைகள் கிடைத்துள்ளன . விசேடமாக மேற்படி விளைச்சல் கிடைத்த துண்டங்கள் வழமையாக மழை பெய்தால் விழுந்து விடுவதாகவும் அறுவடை செய்ய முடிவதில்லை எனவும் அவ்வாறு அறுவடை செய்த காலங்களில் கூட 25 தொடக்கம் 30 மூடைகள் தாண்டியதில்லை என்று தெரிவித்தார்.**

மகேஸ்வரன் ரஜிதன்
நிறுவனர் ரூ இயக்குனர்
இந்திரா குழுமம் .
கிளிநொச்சி



யாழ்ப்பாண பல்கலைக்கழக விவசாய பீடம் வருடம் தோறும் நடத்தும் அக்ரி டெக் (Agritech 2023) நிகழ்வில் மாகாண விவசாய பணிப்பாளர் திருமதி சுகந்தினி செந்தில்குமரனினால் முன்வைக்கப்பட்ட ஆராய்ச்சி கோரிக்கைக்கு அமைவாக பயிரியல் இறுதி ஆண்டு மாணவி சத்தியவாகினியால் நடத்தப்பட்ட விவசாய ஆராய்ச்சி வயல் துண்டத்தின் அறுவடை விழா 2024.08.26 அன்று காலை 10 மணிக்கு இடம்பெற்றது.

மேற்படி ஆராய்ச்சிக்குரிய பயிர் செய்கை நடவடிக்கைகள் அனைத்தும் குமரபுரம் விவசாய போதனாசிரியர் மூ.அனோஜா அவர்களின் நேரடி நெறிப்படுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதல்களுடன் முன்னோடி விவசாயி குணா அவர்கள் மேற்கொண்டிருந்தார்கள்.

மேற்படி ஆய்வில் இயந்திர நெல் நாற்று நடவு பாராசூட் தொழிநுட்பம் பலகை விதைப்பு சாதாரண வீச்சு விதைப்பு என்பன துண்டங்களாக செய்து பார்க்கப்பட்டன.

செய்து பார்க்கப்பட்ட துண்டங்களின் அறுவடை நிகழ்வு விவசாயத்திணைக்களம் கமநல சேவை திணைக்களம் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் பிரதேச விவசாயிகள் விவசாயம் கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்கள் என அனைவரதும் பங்கு பற்றுதலுடன் இடம்பெற்றது.

தலைமை உரையினை கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண பணிப்பாளர் திருமதி ஜெகதீஸ்வரி சூரியகுமார் அவர்கள் நிகழ்த்தினார்கள். அவர் தனது தலைமை உரையில் குமரபுரம் விவசாய போதனாசிரியர் பிரிவில் மேற்படி நவீன தொழில்நுட்ப நெல் பயிர் செய்கை முறைகள் பல வயல்தொண்ணங்களில் இந்தப் போகத்திலும் செய்து பார்க்கப்பட்ட பொழுதிலும் இந்த வயல் துண்டத்திற்குரிய விவசாயி குணா அவர்கள் மற்றும் விவசாய போதனா ஆசிரியர் அனோஜா அவர்கள் பல்கலைக்கழகத்தின் குறித்த ஆராய்ச்சிக்கு உதவி புரிந்தமையினை நன்றியுடன் நினைவு கூர்ந்தார். இவ்வாறான ஒருங்கிணைந்த செயல் திட்டங்கள் வருங்காலத்திலும் நடைமுறைப்படுத்தப்பட தொடரப்பட வேண்டும் என்று கூறினார்.

தலைமை உரையினை தொடர்ந்து அறுவடை ஆரம்பித்து வைக்கப்பட்டது அறுவடை ஆரம்பித்து வைக்க விருந்தினர்கள் சிறப்பு விருந்தினர்கள் அழைக்கப்பட்டதுடன் தொடர்ந்து கமக்காரர் அமைப்புக்களின் தலைவர்கள் செயலாளர்கள் விவசாயிகள் என அனைவரும் அழைக்கப்பட்டனர்

கமநல சேவை திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட ஆணையாளர் திரு தேவரதன் அவர்கள் உரையாற்றும் பொழுது மேற்படி இயந்திரங்கள் பல வருடங்களுக்கு முன்பு அறிமுகப்படுத்தப்பட்ட இருந்தாலும் நீண்ட காலம் பாவனையற்று இருந்ததாகவும் தற்பொழுது விவசாயிகள் பயன்படுத்த ஆரம்பித்திருப்பமை சந்தோஷம் அளிப்பதாகவும் தெரிவித்தார். மேலும் தனது கமநல சேவை நிலையங்களில் மேற்படி நடவு இயந்திரங்கள் இன்னும் இருப்பதாகவும் விவசாயிகள் பெற்று பயன்படுத்த முடியும் என்றும் கூறினார். மேலும் பாராசூட் தொழில்நுட்பத்துக்குரிய நாற்று மேடை தட்டுகள் தமது திணைக்களத்தில் விவசாயிகள் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.



யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விவசாயபீட விரிவுரையாளர் திருமதி லோகா பிரதீபன் அவர்கள் உரையாற்றும் பொழுது மாகாண விவசாய பணிப்பாளர் திருமதி சுகந்தினி செந்தில்குமார் அவர்களின் கோரிக்கை அமைவாக விவசாய பீடம் பயிரியல் துறை மேற்படி ஆராய்ச்சியை செய்திருந்ததாகவும் அதன் வயல் விழாவில் பங்கேற்கின்றமை தனக்கு பெருமையாக இருப்பதாகவும் ஆராய்ச்சி மாணவிக்கு விவசாய போதனாசிரியருக்கு மற்றும் வயல் துண்டத்தை வழங்கிய விவசாயி குணா



அவர்களுக்கு நன்றியையும் தெரிவித்துக் கொண்டார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின்பண்ணை முகாமையாளர் திரு ஸ்ரீதரன் உரையாற்றும் பொழுது இது ஒரு அருமையான சந்தர்ப்பம் எனவும் விவசாயிகளுக்கு தங்களால் உண்மையை எடுத்து இயம்பக் கிடைத்த இந்த சந்தர்ப்பத்திற்கு அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

இரணமடு கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளனங்களின் தலைவர் திரு சிவமோகன் அவர்கள் உரையாற்றுகையில் மேற்படி தொழில்நுட்பத்தை புகுத்த விவசாய திணைக்களம் விவசாயிகளுக்கு பல வருடங்களாக முயற்சித்து வருவதாகவும் இந்த சிறு போகத்தில் தாங்கள் முயற்சித்த பொழுது நீர்ப்பாசன திணைக்களத்தில் இருந்து பொருத்தமான நேரத்தில் நீர் விடுவிக்கப்படாமல் தான் உட்பட பல விவசாயிகள் இயந்திர நெல் நாற்று நடவில் இருந்து பின்வாங்கியதாக குறிப்பிட்டார். இனிவரும் காலங்களில் அனைத்து அரச அலுவலர்களதும் ஒத்தாசை பெறப்படும் இடத்து பல விவசாயிகள் மேற்படி தொழில்நுட்பத்திற்குள் வருவார்கள் என்று கூறினார்.

தொடர்ந்து இந்திரா குழுமத்தின் நிறுவனர் மகேஸ்வரன் ரஜிதன் அவர்கள் உரையாற்றும் பொழுது மேற்படி நவீன தொழில்நுட்பங்களை இன்னும் சிறப்பாக ஆக்குவதற்கு லேசர் மட்டப்படுத்தி (Laser Leveler ) ஒன்றினை கிளிநொச்சி மாவட்டத்திற்கு பெற்றுத்தரும்படி நிகழ்வில் கலந்து கொண்டிருந்த அனைத்து அரசாங்க அலுவலர்களையும் விவசாயிகள் சார்பாக கேட்டுக்கொண்டார். மேலும்நீரை சிக்கனமாக பாவிக்க கூடிய மேற்படி தொழில்நுட்பங்களை பயன்படுத்தக்கூடிய விவசாயிகளுக்கு அவர்களை ஊக்குவிக்கும் முகமாக பயிரிடும் பரப்பளவை அதிகரித்துக் கொடுப்பது மற்றும் பிற அரச மானியங்களினை அதிகரித்து வழங்குவது தொடர்பாக சம்பந்தப்பட்ட அரசாங்க அலுவலர்களிடம் கோரிக்கை வைத்தார்.

இறுதியாக விவசாயி குணா அவர்கள் உரையாற்றும் பொழுது பல்கலைக்கழகம் மற்றும் விவசாயத் திணைக்களத்தினரின் கோரிக்கையை ஏற்று தான் இந்த தொழில்நுட்பத்தினை செய்து பார்க்க ஆராய்ச்சிகளையும் செய்து பார்க்க தனது வயலுடன் முன்வந்த பொழுதிலும் முதலாவது வாரங்களில் தான் சொல்ல முடியாத அளவிற்கு நம்பிக்கை இல்லாமல் இருந்ததாகவும் முதலாவது களை எடுப்புக்கு பின்னர் வயலினை அவதானித்த பொழுது தனக்கு நம்பிக்கை அதிகரித்தமையையும் சுட்டி காட்டினார். இந்த போகத்தின் வெற்றியினை தொடர்ந்து தான் தனது வயலின் ஏனைய பகுதிகளையும் நவீன தொழில்நுட்பங்களில் ஈடுபடுத்த தீர்மானித்து உள்ளதாகவும் கூறினார். மேலும் இரண்டு தொடக்கம் மூன்று ஏக்கர் வரை பயிற்சி பயிரிடும் விவசாயிகள் பாராசூட் தொழில்நுட்பத்தை முயன்று பார்க்கும்படி அறிவுரை கூறினார். அதற்கு மேற்பட்ட வயல் செய்யும் விவசாயிகள் இயந்திர நடவை முயற்சிக்கலாம் என்று கூறினார் . எதிர்பாராத விதத்தில் விபத்தொன்றினை சந்தித்த பொழுதிலும் தனக்கு அனைத்து வகையிலும் ஊக்கமளித்த கூடவே இருந்த குறிப்பாக தங்களுடன் சேர்ந்து சேற்றில் இறங்கி வேலை செய்த விவசாய போதனசிரியருக்கு என்றென்றும் நன்றி தெரிவித்தார். இவ்வாறான விவசாய அலுவலர்கள் தமக்கு கிடைத்த வரம் என்று கூறி உரையினை நிறைவு செய்தார்

அறுவடையின் உண்மையான பெறுதிகள் மாணவியின் ஆராய்ச்சி பிரசுரத்தின் பின்னர் இங்கு பதிவிடப்படும். விவசாயி குணாவின் கருத்துப்படி டீப 366 மூன்றரை மாத வெள்ளையின நெல்லில் ஏக்கருக்கு 40 மூடைகள் கிடைத்துள்ளன . விசேடமாக மேற்படி விளைச்சல் கிடைத்த துண்டங்கள் வழமையாக மழை பெய்தால் விழுந்து விடுவதாகவும் அறுவடை செய்ய முடிவதில்லை எனவும் அவ்வாறு அறுவடை செய்த காலங்களில் கூட 25 தொடக்கம் 30 மூடைகள் தாண்டியதில்லை என்று தெரிவித்தார். இம்முறை பயிர் செய்கையில் நெல் கதிர் முற்றிய பிறகு கடும் மழை பொழிவு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

நிகழ்வின் முழுமையான காணொளி யினைக்கான இதனை ஸ்கேன் செய்யவும்

# புகலிடம் தேடும் புராதன பறவை.

**வடக்கு மாகாணத்திலே உள்ள ஐந்து மாவட்டங்களிலே யாழ்ப்பாணத்திலேயே அதிகளவு காகங்கள் நிறைந்திருந்தன. அண்டங்காகம்,கரியன் காகம்,வீட்டுக்காகம் என வகைகளை உடையவை. இவை பூவரசுகளிலும் தென்னை மற்றும் பனை மரங்களிலே கூடுகட்டி வாழும் இயல்பை கொண்டிருந்தன. காகங்களின் ஆயுட்காலம் 15 தொடக்கம் 20 வருடங்கள் என அவதானிகள் வெளிப்படுத்தியுள்ளனர்.**





லதா கந்தையா

உலகின் பெரும்பாலான நாடுகளிலே காகங்களில்லாத கதைகளில்லை. தமிழர்களின் கடவுள் கதைகளிலும் சிறுவர் கதைகளிலும் காகங்களுண்டு. காகத்தினை சைவ சமயத்தை பின்பற்றும் மக்கள் சனீஸ்வர பகவானின் வாகனமாக கருதுகிறார்கள். விரத காலங்களிலே காகத்துக்கு உணவைப்படைத்து உண்கிறார்கள். புரட்டாதி மாதத்தில் வரும் சனிக்கிழமைகளில் எள் எண்ணெய் எரித்து சனிபகவானுக்கு விரதமிருக்கிறார்கள். ஆடி அமாவைசை,சித்திரைப்பௌர்ணமி மற்றும் விசேட விரத காலங்களில் யாழ்ப்பாணத்தவர்கள் காகத்துக்கு உணவைப்படைக்க அழைப்பதும் ,காகங்கள் அவற்றை உண்பதற்கு காட்டும் பரத நாட்டியங்களும் பரவசமானவை. சிலவேளை மரங்களின் கிளைகளில் இருந்து கொண்டு கா ....கா... என அழைத்தாலும் செவிப்புலனிழந்ததுபோல பாசாங்கு செய்து அமர்ந்திருக்கும் அழகோ அழகு.

சிறுவர் கதைகளிலே காகங்களை புத்திசாலிப்பறவையாகவும் ஏமாந்த பறவையாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளன. அரைவாசியாக நீர்ப்பானையில் இருந்த நீரை அருந்துவதற்கு சிறிய கற்களைப்போட்டு தண்ணீரை மேலுயர்ந்தி அருந்திய கதையில் புத்திசாலியாகவும், பாட்டியிடம் வடையை திருடிவந்து நரியிடம் ஏமாற்றமடைந்ததாகவும் கதைகளுண்டு. சீனர்கள் தங்கள் காகக்கதைகளிலே காகம் நேரிய வழியில் பாட்டிக்கு விறகு சேகரித்து கொடுத்து கூலியாக வடையை பெற்றதாகவும், ஏமாற்ற வந்த நரியை அறிவுரை கூறி பாட்டிக்கு உதவி வடையை பெறுமாறு அறிவுறுத்துவதாகவும் கதையுண்டு. அதே கதை வடிவத்தை தற்போது இலங்கையின் ஆரம்பகல்விப்பாடத்திட்டத்தில் உள்வாங்கியும் உள்ளனர்.

காகம் கரைந்தால் வீட்டிற்கு விருந்தாளிகள் வருவர் என்பது தமிழர்களின் நம்பிக்கை ஆகவும் உள்ளது. தகவல் பரிமாற்ற சக்தியாகவும் குறியீடாகவும் காகத்தை முன்னோர் கருதியிருக்கிறார்கள். காகம் கரையும்போது அதனை நோக்கி சிறுவர்கள் பெரியவர்கள் இவ்வாறானதொரு பாடலை வழிமுறையாக காகத்தை நோக்கி பாடியுள்ளனர்.

" "கா...கா..கா..காக்கையாரே! ஆட்கள் வந்தால் நடந்து காட்டு. தந்தி வந்தால் தெத்திக்காட்டு. சாவீடு வந்தால் சரிந்து காட்டு. " என்பதாகும். காகம் இயல்பாக கரைந்தால் விருந்தினர் வரப்போவதாகவும், பறந்தடித்து கரைந்தால் விபரீதமெனவும் காகம் மனிதர்களோடு சினேகித்திருந்த காலம் மலையேறிவிட்டது. ஒற்றுமைக்கும் பகிர்ந்து உண்ணலுக்கும் காக்கை எடுத்துக்காட்டாகக் காட்டப்படுகிறது. ஆஸ்திரேலிய பூர்வகுடிமக்கள் காக்கைகள் கலாச்சாரத்தின் சின்னமாகவும் மூதாதையரின் அம்சமாகவும் கருதப்படுகிறது.

அதே நம்பிக்கை சைவ சமய மக்களிடமும் காணப்படுகின்றது. தமிழிலக்கியங்களிலே காக்கை பாடினியார் என ஒரு புலவர் இடம்பெறுகிறார். இவர் காக்கைகளை பாட்டிலே பாடியதால் இப்பெயரை பெற்றுள்ளார். இந்நூல் மெசபடோமிய நாகரிகத்தைப் பற்றிக் கூறும் ஐந்து கவிதைகள் கொண்ட இதிகாசம் ஆகும். திபெத்திய கலாச்சாரத்தில் 'தருமபாலா' பூமியில் எடுத்துள்ள அவதாரங்களில் ஒன்றாகக் காகம் கருதப்படுகிறது. ஐரிஷ் புராணங்களின்படி காகங்கள் போர் மற்றும் இறப்பிற்கான 'மாரிகின்' என்ற கடவுளாகக் கருதப்படுகிறது.

காகம் கரைந்தால் வீட்டிற்கு விருந்தாளிகள் வருவர் என்பது தமிழர்களின் நம்பிக்கை ஆகவும் உள்ளது. தகவல் பரிமாற்ற சக்தியாகவும் குறியீடாகவும் காகத்தை முன்னோர் கருதியிருக்கிறார்கள். காகம் கரையும்போது அதனை நோக்கி சிறுவர்கள் பெரியவர்கள் இவ்வாறானதொரு பாடலை வழிமுறையாக காகத்தை நோக்கி பாடியுள்ளனர். " "கா...கா..கா.. காக்கையாரே! ஆட்கள் வந்தால் நடந்து காட்டு. தந்தி வந்தால் தெத்திக்காட்டு. சாவீடு வந்தால் சரிந்து காட்டு. " என்பதாகும். காகம் இயல்பாக கரைந்தால் விருந்தினர் வரப்போவதாகவும், பறந்தடித்து கரைந்தால் விபரீதமெனவும் காகம் மனிதர்களோடு சினேகித்திருந்த காலம் மலையேறிவிட்டது.



ஒற்றுமைக்கும் பகிர்ந்து உண்ணலுக்கும் காக்கை எடுத்துக்காட்டாகக் காட்டப்படுகிறது. ஆஸ்திரேலிய பூர்வகுடிமக்கள் காக்கைகள் கலாச்சாரத்தின் சின்னமாகவும் மூதாதையரின் அம்சமாகவும் கருதப்படுகிறது. அதே நம்பிக்கை சைவ சமய மக்களிடமும் காணப்படுகின்றது. தமிழிலக்கியங்களிலே காக்கை பாடினியார் என ஒரு புலவர் இடம்பெறுகிறார். இவர் காக்கைகளை பாட்டிலே பாடியதால் இப்பெயரை பெற்றுள்ளார்.

கில்காமேஷ்' என்ற நூல் மெசபடோமிய நாகரிகத்தைப் பற்றிக் கூறும் ஐந்து கவிதைகள் கொண்ட இதிகாசம். இது காகங்களுக்காகவே எழுதப்பட்டுள்ளமை சிறப்பாகும். திபெத்திய கலாச்சாரத்தில் 'தருமபாலா' பூமியில் எடுத்துள்ள அவதாரங்களில் ஒன்றாகக் காகம் கருதப்படுகிறது. ஐரிஷ் புராணங்களின்படி காகங்கள் போர் மற்றும் இறப்பிற்கான 'மாரிகின்' என்ற கடவுளாகக் கருதப்படுகிறது.

பழம்பெரும் இந்து மத வேத தத்துவ நூலாகக் கருதப்படும் 'யோகவசிஷ்டா' வில் மிக வயதான ஞானி ஒருவர் காகவடிவில் குறிப்பிடப்படுகிறார். இவ்வாறு பல்வேறுபட்ட பழமைமிக்க நூல்களிலும் இடம்பிடித்துள்ள காகம் ஒரு புராதன காலப்பறவை என்றால் மிகையல்ல. அவ்வாறான புராதணச்சிறப்புக்கொண்ட காகங்கள் யாழ்ப்பாணத்தில் நிறைந்திருந்தமை யாழ்ப்பாண மண்ணின் தொன்மைக்கும் சிறப்புக்கும் எடுத்துக்காட்டு. ஆனால் யாழ்ப்பாணத்து மனிதர்கள் தொன்மைகளை தொலைக்கும் மனிதர்களாக மாறி வருகின்றமை கவலைக்கிடம்.

நகர்ப்புற அபிவிருத்தி என்ற பெயரில், வீதி அகலிப்பு என்ற பெயரில், கட்டுமான விஸ்தரிப்பு என்ற பெயரில் காகங்கள் கூடமைத்த மரங்களை தறித்து வருகிறார்கள். கூடுகளை இந்த காகங்களுக்கு இனப்பெருக்கத்தை மேற்கொள்ள இடமற்றுப்போய்விட்டது. அவையும் புலத்தைவிட்டு பெயரத்தொடங்கிவிட்டன. எண்ணிக்கையளவில் அவை குறைவடைந்துவிட்டன. கடற்கரைகளில் கூட காகங்களின் குடித்தொகை குறைவடைந்து செல்கின்றது.

போர்நடந்த பூமியின் வெடி அதிர்வுகளுக்கு கூட நின்று நிலைத்திருந்த காகங்கள் ஏன் இடம்பெயர்ந்தன? ஏன் அருகிப்போகிறது ? எத்தனை போர் நடந்தபோதும் யாழ்ப்பாண மனிதர்களுக்கும் காகங்களுக்கும் மனதளவிலே நெருக்கம் இருந்து கொண்டிருந்தது. தகவல் கொண்டுவரும் நண்பனாக விளங்கியது. நவீன தொலைபேசிகள் தொடர்பாடல்கள் வந்தபின்பு காகங்களுடனான உறவு விரதகாலத்துக்கென மாறிவிட்டது. காகங்களுக்கு சோறிட்ட மனிதர்கள் இப்போ சீனவெடிகளை கொளுத்தி எறிந்து கலைக்கிறார்கள்.

பொலித்தினுடன் உணவுகளை வீசுவதால் காகங்களுக்கும் இனப்பெருக்க நிலை குறைவடைந்திருக்க வாய்ப்பு அதிகம். அத்தோடு பொலித்தீன்களை உண்பதால் இறந்தும் போகின்றன. மனிதர்கள் போடும் குப்பை கூழங்களை உண்டு சுற்றுச்சூழலை இயற்கையாகவே சுத்தப்படுத்திப்பாதுகாக்கும் இந்தப்பறவை ஒவ்வொரு நாளும் குளிக்கும் சுத்தமான பறவையாகும். ஆகாயத்தோட்டி என அழைக்கப்படும் காகங்களை இலகுவாக பயிற்றுவிக்க முடியும். சட்டவிரோத செயல்களையும் ஈடுபடுத்த பழக்க முடியும். அதனால் தான் அவற்றை வளர்ப்பது சட்டவிரோத குற்றமாக கருதப்படுகின்றது.

பறவைகளில் அதிக அறிவுத் திறன் பெற்ற பறவை இவற்றின் அறிவுத்திறனுக்கு அவற்றின் மூளைப்பகுதியில் அமைந்துள்ள 'நிடோபோடாலியம் காரணம் ஆகும்.

ஒரு புராதன பறவையை,

ஒரு புத்திசாலிப்பறவையை, சமுக அக்கறை கொண்ட ஆகாயத்தோட்டியை யாழ்ப்பாணம் வேகமாக இழந்து வருகிறது.



# சேனைப் பயிர்ச்செய்கை

4ம் பக்கத் தொடர்ச்சி....

நடைபெறுகின்றது. அவையாவன Nuvadali hena, Ath danguwa hena,Mukulan hena, Hen kanaththa ஆகியன ஆகும்.



**சேனை பயிர்செய்கையில் நவீனத்துவம்.**

1)சேனைப்பயிர்செய்கைகளில் ஆரம்பகாலத்தில் மண்வெட்டி, கத்தி கொண்டும் மாடுகளினை கொண்டு உழுதும் பயிரினை நாட்டினார். ஆனால் இன்றயை காலத்தில் உழவுஇயந்திரங்களின் மூலம் உழுது பயிர்செய்கையினை மேற்கொள்கின்றார்கள்.

2)ஆரம்பகாலத்தில்இயற்கை பசளைகளினை கொண்டு அவற்றினை பயன்படுத்தி பயிர்செய்கையினை மேற்கொண்டனர். ஆனால் இன்று கிருமிநாசினிகள், களைகொல்லிகள் போன்றவற்றினை உபயோகித்து பயிரினை வளர்ச்சி அடைய செய்கின்றனர்.

3)ஆரம்பகாலங்களில் மழையினை மட்டும் ஆதாரமாக கொண்ட பயிர்செய்கையாக காணப்பட்டது. ஆனால்இன்று நீர்பாசனத்தையும் அதனது தொழிநுட்பத்தினையும் பிரயோகித்து மேற்கொளளப்படுகின்றது. குறிப்பாக குழாய்கிணறுகள், செயற்கை நீர்த்தேக்கங்கள் அமைத்தல் போன்ற முறைகளில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

4)சேனை பயிர்செய்கைகள் ஆரம்பகாலங்களில் குடும்ப அங்கத்தவர்களினால் மேற்கொள்ளப்பட்டது. இன்று தொழிலாளர்களினை அதிகளவில் உள்ளடக்கி பரந்துபட்ட அளவில் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் மூலம் இன்று மக்கள் வேலைவாய்ப்பினை ஈட்டிக்கொள்கின்றனர்.

5)சேனை பயிர்செய்கையினை ஆரம்ப காலத்தில் சுயதேவைக்காக மட்டும் மக்கள் மேற்கொண்டனர். ஆனால் இன்று நுகர்வுக்காக மட்டுமன்றி வர்த்தக நோக்குடனும் மேற்கொள்வதினை அவதானிக்கலாம். குறிப்பாக பழங்கள், மரக்கறி வகைகள், தானியங்கள், ஆகியன வர்த்தக நோக்கம் கருதி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதனை பிலிப்பைன்ஸ், மடகஸ்கார், கலிபோர்னியா, இலங்கை, பிரேசில், ஆகிய நாடுகளில் அவதானிக்கலாம்.

6)சேனைப்பயிர் செய்கையில் ஆரம்பத்தில் மண்ணினை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்பட்டது. ஆனாலும் இன்று சில நாடுகளில் மண் இன்றிய குழாய் மூலமான பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இதனை பிலிப்பைன்ஸ், மெஸ்சிக்கோ ஆகிய நாடுகளில் அவதானிக்கலாம்.

தமிழர் பொருண்மியத்தில் உங்கள் விளம்பரங்களைப் பிரசுரிக்க...

கட்டணவிபரம்

| | கறுப்பு வெள்ளை | வர்ணம் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.10,000/- | ரூ.20,000/- |
| அரைப்பக்கம் | ரூ.6,000/- | ரூ.12,000/- |
| காற்பக்கம் | ரூ.3,500/- | ரூ.8,000/- |
| வரி விளம்பரம் | இலவசம் | இலவசம் |

தமிழர் பொருண்மியம்,
கிறீன் மீடியா ஹவுஸ்,
68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

வாட்ஸ் அப் இலக்கம் +94 777 920 384

# பூநகரியில் பனம் விதைகள் சேகரிப்பு திட்டம்

## நடைமுறைப்படுத்தும் புலம்பெயர் பூநகரி தமிழன் சுப்பிரமணியம் வன்னியசிங்கம்

கடந்த கால போரினால் பெருமளவு பனை மரங்கள் தமிழர் தாயகப் பகுதிகளில் அழிக்கப்பட்டுள்ள நிலையில் இன்று உள்ள சூழல் நேயம் சார்ந்த சில தன்னார்வ அமைப்புக்களும், நிறுவனங்களும், தனியாரும் எடுக்கும் முயற்சிகளால் பனை விதைகள் தொடர்ந்து நாட்டப்பட்டு வருகின்றன.

வட மாகாணத்தின் தொன்மையான பிரதேசங்களில் ஒன்றான

பூநகரி பகுதியில் மட்டுவில் நாடு, மறவகுறிச்சி பத்தினியாற்காட்டு பிள்ளையார் சனசமுகம் நிலையம் மற்றும்

Poonakary palm industry, அறிவாலயம் போன்ற சமூக நிறுவனங்கள் ஒன்றிணைந்து பணம் விதை சேகரிப்பு திட்டம் ஒன்றினை ஆரம்பித்து அதன் மூலமாக பனை விதை நாட்டுதல் பனை தொடர்பான வளங்களை மீள கட்டி எழுப்புதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை தற்போது சமூகத்திற்கு மிகப்பெரும் எடுத்துக்காட்டாக அமைந்திருக்கின்றது.

பூநகரி பிரதேச சபையின் ஆதரவுடனும் வழிகாட்டலுடனும் ஆரம்பிக்கப்பட்டு இருக்கும் இந்த நடவடிக்கையினை பூநகரி பிரதேசத்தினை தனது தாய் நிலமாக கொண்ட ஆஸ்திரேலியா வாழ் புலம்பெயர் தமிழர் சுப்பிரமணியம் வன்னிய சிங்கம் அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்..காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் தனது தாய் நிலம் மீதான பற்றும் அக்கறையையும் கொண்ட இவ்வாறான செயற்பாடுகள் இன்னும் பல புலம்பெயர் சொந்தங்களையும் தன் தேசம் பற்றி சிந்திக்க வைத்திருக்கிறது என்று சொன்னால் மிகை ஆகாது. இந்த பனம் விதை சேகரிப்பு திட்டம் தொடர்பாக நடைமுறை படுத்துகின்ற குழுவினரிடம் வினாவிய போது,

பனை நமது நாட்டின் வளம் . இயற்கை தரும் இந்த கொடையினை பக்குவப்படுத்தி அவற்றை சமூகத்துக்கு பிரயோசனம் உள்ள உற்பத்திகள் ஆக மாற்றினால் பலரது வாழ்வாதாரத்துக்கு பங்களிக்க முடியும் என்கின்றனர் இவர்கள்.

பணம் விதைகளை எப்படி தெரிவு செய்கிறீர்கள்? அதனை விதைப்பதற்கு உரிய உபாயங்களை கையாள்வது எப்படி என்று கேட்டோம்?

அதற்கு அங்கிருந்த பழுத்த முதியவர் ஒருவர் பனம் விதைகளை பற்றி ,மிகவும் ஆர்வத்துடன் அவற்றை திட்டமிட்டு எப்படி விதைக்க வேண்டும் என்பது பற்றியும்




விளக்கினார்.

தானே விழுந்து தானே முளைத்து வளரும் தனித்துவமான மரமான பனை வறண்ட நிலத்தாவரம். இது நார் வேர் தொகுதியைக் கொண்டிருப்பதனால் அதன் வேர்கள் மண்ணை இறுக பற்றிப் பிடிக்கின்றன. இதனால் மண்ணரிப்பிலிருந்து நிலம் பாதுகாக்கப்படுகின்றது. நிலத்தடி நீரை மேலே கொண்டு வரும் ஆற்றல் இதன் வேர்களுக்கு உண்டு என்கின்றனர் பனை வல்லுநர்கள். வேரிலிருந்து, குருத்து வரை மனிதனுக்கு பயன்படுகின்றது. கால்நடைகளுக்கும் சிறந்த உணவாகிறது.

பெண் பனையிலிருந்து ஆடி மாத நடுப்பகுதியிலிருந்து பனம்பழங்கள் பெறப்படுகின்றன. புரட்டாதி இறுதியும், ஐப்பசி மாதமுமே பனை நடுகைக்கு ஏற்ற காலப்பகுதியாகும். ஐப்பசியில் பனம் விதைகள் நாட்டினால் எப்பசியினையும் போக்கும் கற்பகத்தரு என்பது முன்னோர் வாக்காகும்.

ஒரு விதையுள்ள பழம், இரு விதையுள்ள பழம், மூன்று விதையுள்ள பழம் என மூன்று வகையாக பனம்பழங்கள் கிடைக்கின்றன. ஒரு விதையுள்ள பழம் பெண் பனையாகவும், இரு விதையுள்ள



பழத்தினுள் ஒன்று, ஆணாகவும் மற்றையது பெண்ணாகவும், மூன்று விதையுள்ள பழத்தில் இரண்டு ஆண் பனைகளும் ஒன்று பெண் பனையாகவும் வளரும் என அனுபவமுள்ளவர்கள் சொல்கிறார்கள்.

நல்ல இன பனைகளில் இருந்து விதைகளை தேர்வு செய்தல் முக்கியமானது. பொதுவாக இரு விதைகளுள்ள பனம் பழங்களை தேர்வு செய்தால் நல்லது. உயரம் குறைந்த பனை மரங்கள், தோல் முழுவதும் கறுப்பான பழம், கறுப்பானதும் பரிமுள் பக்கத்திற்கு எதிர்ப்பக்கம் செம்மஞ்சள் நிறமுள்ள பனம்பழம், மற்றும் கறுப்பும் செம்மஞ்சளும் சேர்ந்த பனம்பழங்கள் சுவை மிகுந்ததாகவும் நிறைய களியினையும் கொண்டிருக்கும். இவற்றை தெரிவு செய்து நடுகை செய்தால் சிறந்த இனப்பரம்பலை பெற்றுக் கொள்ளலாம்.

கனதியான விதைகள் நடுகைக்கு உகந்ததாகும். அப்படி பார்த்து நடுகை செய்தால் 90 வீதமானவை முளைப்பதனை முன்னரே உறுதி செய்ய முடியும். சிறு குழி வெட்டி பனம் பழ விதையின் உள் பகுதி தரையை தொடுமாறு பார்த்து நடுகை செய்ய வேண்டும்.

நீர்நிலைகள், குளங்கள், கால்வாய்களின் வெளிப்புற கட்டில் இருந்து சற்று தள்ளி பனையை நாட்டலாம். நிரையாக பனை விதை நடுகை செய்யும் போது 2.5 மீற்றர் இடைவெளியினை பேண வேண்டும். இடங்களின் அளவை பொறுத்து 2.5 X 2.5 மீற்றர், 3 X 3 மீற்றர், 5 X 5 மீற்றர் அளவுகளில் நேராகவும், சதுர அமைப்பாகவும் நடுவது சிறந்தது.

தோப்பாக நடுகை செய்யும் போது இயலுமானவரை கால்நடைகள் வடலியை கடிக்காதவாறு பாதுகாப்பு வேலிகளை அமைத்தால் பத்து வருடங்களில் பனையில் இருந்து பயன்களை பெறக் கூடியதாக இருக்கும். திக்கம் வடிசாலை அமைந்துள்ள காணியில் நாட்டப்பட்ட பனை 10 வருடங்களில் பயன் தந்ததை அனுபவ ரீதியாக நேரடியாகவே உணர்ந்தோம்.

பனம் விதைகளை சேகரித்து வெயில் படாத இடங்களில் பாதுகாப்பதே நல்லது. சேகரிக்கும் விதைகளை இயன்றளவு அவை முளைக்க முன் விதைக்க வேண்டும். இல்லாவிடின் வேர் விடும் போது விதைகளை இடம்மாற்றினால் அந்த ஒரே வேர் முறியும் தறுவாயில் அந்த பனை மரம் முளைக்காது போய்விடும். இதனால் நீண்டகாலத்துக்கு சேமித்து வைத்திருந்து பனை விதைகளை நடுகை செய்வதனை தவிர்க்க வேண்டும்.

பனம் விதைகளை நடுவே செய்வதோடு மாத்திரம் நின்று விடாமல் அவற்றைப் பார்த்தியாக இட்டு பனங்கிழங்கு, ஒடியல், என்று பதப்படுத்தி அவற்றிற்கு மதிப்பு கூட்டி விற்பனை செய்ய முடியும் தற்போது பணம் பண்டங்களுக்கு மிகுந்த கேள்வி இருக்கின்றது .

வெளிநாடுகளில் இருந்து வருகின்ற எமது சொந்தங்கள் பணம் பந்தங்களை மிகவும் விரும்பிக் கொள்வனவு செய்கின்றனர் .அதனால் ஏற்றுமதி செய்யக்கூடிய வாய்ப்புகள் கூட இங்குள்ள அவர்களுக்கு அமையும் .

அத்தோடு நமது குழந்தைகளுக்கும் அடுத்த சந்ததிக்கும் பணம் பொருட்களை நாங்கள் அறிமுகப்படுத்த வேண்டும் நாங்கள் ஆட்சி அப்புவின் கையால் சாப்பிட்ட ஒடியல் புட்டும் பனங்கிழங்குகளும் இன்றைக்கும் எமது உடலில் வலிமையை தக்க வைத்துக் கொண்டிருக்கின்றனர்.

தற்போது ஒவ்வொன்றும் இரண்டு ரூபாய் வீதம் கொள்வனவு செய்யப்படும் பணம் விதைகளை பாத்தியிட்டு படங்கிழங்குகளை பதப்படுத்தி மதிப்பு கூட்டி பணம் பண்டங்களாக விற்பனை செய்வதற்கு திட்டமிட்டுள்ளதோடு , பனம் விதை நடுகை நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதற்கு ஆர்வமாக உள்ளனர்.

உண்மையில் இவ்வாறான திட்டங்கள் மக்கள் மத்தியில் பலத்த வரவேற்பை பெற்றுக் கொள்வதோடு, விளையாட்டு விளையாட்டாக சேகரிக்கும் பணம் விதிகளுக்கு பணம் கிடைப்பதும் அவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை கொடுக்கின்றது என்கின்றனர்.

பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்கள் கூட ஓய்வு நேரங்களில் பனம் விதைகளை சேகரித்து தமது கல்வி தேவைகளை நிவர்த்தி செய்வதோடு, இது தமக்கு சிறந்த பொழுதுபோக்காகவும் அமைகின்றது என்கின்றனர் நண்பர்கள் கூடி விளையாடிய படியே வனம் விதைகளை சேர்ப்பதையும் அவற்றை எண்ணி அடுக்குவதையும் கண்ணுற்ற போது மகிழ்ச்சியாக இருந்தது. எமது அடுத்த தலைமுறைக்கு பனைவளம் சார்ந்த அறிவு கடத்தப்படுகிறது என்பது உண்மையில் மகிழ்ச்சிக்குரிய விடயம் தான்.

பனையும் பனை சார்ந்த இடங்களும் நமது வாழ்வியலில் தவிர்க்க முடியாத ஒரு முக்கிய இடத்தை பெற்றிருக்கின்றன .அவற்றை பாதுகாப்பதும் இன்னும் வளப்படுத்துவதும் நம் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

# அதிசயம் செய்யும் குரக்கன்



பூரணி

உணவு மற்றும் விவசாய அமைப்பும், ஐக்கிய நாடுகள் சபையும் இணைந்து 2023 ஆம் ஆண்டை சர்வதேச தினை ஆண்டாக (IYM2023) நியமித்துள்ளன. இது தினையின் ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து நன்மைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக அமைகிறது. இந்த நேரத்தில் கேழ்வரகு குரக்கனின் ஊட்டச்சத்து குறித்து இங்கே காண்போம்.

நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட பலர், அரிசி அல்லது கோதுமைக்கு பதிலாக தினைகள், குறிப்பாக குரக்கன் அல்லது விரலி தினைகளை எடுத்துக்கொள்ளலாம். ஏனெனில் அவை மிகவும் பழமையான மற்றும் மிகவும் பிரபலமான தானியமாக இருக்கிறது. குரக்கன் அனைத்து தினைகளிலும் லேசானது என்பதால், அதை பழக்கப்படுத்துவது எளிமையானது என்று கருதப்படுகிறது. இது அரிசி அல்லது கோதுமையின் அதே கார்போஹைட்ரேட் மதிப்பைக் கொண்டுள்ளது.

ஊட்டச்சத்துகள் நிறைந்தது குரக்கனில் கல்சியம், இரும்பு, பொட்டாசியம் போன்ற முக்கிய கூறுகள் அதிகம் உள்ளது. இதில் அதிக கல்சியம் உள்ளது , இது எலும்புகள் மற்றும் பற்களை வலுவாக வைத்திருக்க சிறந்த தேர்வாக அமைகிறது. நியாசின், தியாமின், ரிபோஃப்ளேவின் போன்ற பி வைட்டமின்களும் இதில் உள்ளன. பசையம் இல்லாதது பசையம் சகிப்புத்தன்மை அல்லது செலியாக் நோய் உள்ளவர்களுக்கு குரக்கன் ஒரு ஆரோக்கியமான மற்றும் சத்தான விருப்பமாகும்.

இது பசையம் இல்லாதது மற்றும் எளிதில் ஜீரணிக்கக்கூடியது, இது வயிற்றில் மென்மையாக்குகிறது. உணவு நார்ச்சத்து அதிகம்

குரக்கன், கரையக்கூடிய மற்றும் கரையாத உணவு நார்ச்சத்துக்கான சிறந்த மூலமாகும். இந்த ஃபைபர் உள்ளடக்கம் செரிமானத்திற்கு உதவுகிறது, இரத்த சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்த உதவு கிறது, மேலும் நிறைவான உணர்வை ஊக்குவிக்கிறது, இது எடை நிர்வாகத்திற்கு நன்மை பயக்கும்.

### நீரிழிவு நோயை நிர்வகிக்கிறது

அதிக நார்ச்சத்தும், அதன் குறைந்த கிளைசெமிக் இண்டெக்ஸ்ும், நீரிழிவு நோயாளிகளுக்கு சிறந்த தேர்வாக அமைகிறது. கேழ்வரகை உட்கொள்வது இரத்த சர்க்கரை அளவை உறுதிப்படுத்தவும், இன்சுலின் உணர்திறனை மேம்படுத்தவும் உதவும். மேலும், இதில் உள்ள ஆன்டிஆக்ஸிடன்ட்கள் மற்றும் நார்ச்சத்து இதய ஆரோக்கியத்திற்கு பங்களிக்கிறது. இது கொலஸ்ட்ரால் அளவைக் குறைக்க உதவுகிறது. மற்றும் தமனிகளில் பிளேக் உருவாவதைத் தடுப்பதன் மூலம் இதய நோய்களின் அபாயத்தைக் குறைக்கிறது.

### எடையை நிர்வகிக்கும்

குரக்கனில் நார்ச்சத்து மற்றும் புரதச்சத்து அதிகமாக இருப்பதால் பசியைக் கட்டுப்படுத்தி, நிறைவான உணர்வை ஊக்குவிக்கிறது. இது எடை இழப்பு உணவுகளுக்கு ஒரு சிறந்த கூடுதலாக உதவுகிறது. ஏனெனில் இது ஒட்டுமொத்த கலோரி உட்கொள்ளலைக் குறைக்க உதவும்.

### நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்

குரக்கனில் ஆன்டிஆக்ஸிடன்ட்கள் நிறைந்துள்ளன. இது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த ஆன்டி ஆக்ஸிடன்ட்கள் உடலுக்கு தீங்கு விளைவிக்கும் ஃப்ரீ ரேடிக்கல்களை எதிர்த்துப் போராடவும், பல்வேறு நோய்களிலிருந்து பாதுகாக்கவும் உதவுகின்றன.

### குழந்தைக்கான உணவு

குரக்கன் எளிதில் செரிமானம் மற்றும் ஊட்டச்சத்து அடர்த்தி காரணமாக குழந்தைகளுக்கு தாய்ப்பால்கொடுக்கும் உணவாக பயன்படுத்தப்படுகிறது. இது வளர்ச்சிக்கு தேவையான ஊட்டசத்துக்களை வழங்குகிறது.

### தோல் ஆரோக்கியத்தை ஆதரிக்கிறது

குரக்கனில் உள்ள அமினோ அமிலங்கள் மற்றும் ஆக்ஸிஜனேற்றங்கள் ஆரோக்கியமான மற்றும் பொலிவான சருமத்திற்கு பங்களிக்கின்றன. உங்கள் உணவில் கேழ்வரகை சேர்ப்பது தோல் பிரச்சினைகள் மற்றும் வயதான அறிகுறிகளை எதிர்த்துப் போராட உதவும்.

### ஊட்டச்சத்து வகை

குரக்கனை, கஞ்சி, ரொட்டி, தோசை போன்ற பல்வேறு வடிவங்களில் உட்கொள்ளலாம் அல்லது சுடப்பட்ட பொருட்களுக்கான அடிப்படையாகவும் கூட உட்கொள்ளலாம். இந்த பன்முகத்தன்மை உங்கள் ரசனைக்கு ஏற்ற வகையில் உங்கள் உணவில் சேர்த்துக்கொள்வதை எளிதாக்குகிறது.

குரக்கன், உங்கள் ஆரோக்கியத்தை கணிசமாக மேம்படுத்தக்கூடிய ஊட்டச்சத் துக்களை கொண்டுள்ளது. உங்கள் இரத்த சர்க்கரையை சீராக்க விரும்பினாலும், இதயத்தை ஆரோக்கியமாக வைத்திருக்க விரும்பினாலும், செரிமானத்திற்கு உதவ விரும்பினாலும் அல்லது பசையம் இல்லாத, ஊட்டச்சத்து நிறைந்த தானியத்தை சாப்பிட விரும்பினாலும்,

குரக்கன் உங்கள் உணவில் இடம் பெறத் தகுதியானது. சமையலறையில் அதன் பன்முகத்தன்மை மற்றும் பல ஆரோக்கிய நன்மைகள், இதை நன்கு சமநிலையான உணவின் முக்கிய பகுதியாக ஆக்குகின்றன. இப்படி ஆரோக்கியமான நன்மைகளை பெறுவதற்கு உங்கள் உணவுகளில்

குரக்கன் சேர்த்துக் கொள்ளுங்கள்.



## றப்பர் பாலில் விழுந்து மறைந்த கண்ணீர் - 02

# இரு நூற்றாண்டு கால றப்பர் தோட்ட தொழிலாளர்களின் சோகக் கதை


சங்கா சிங்ஹ ஆரச்சி

'அதிகாலையில் 300 றப்பர் மரங்களில் பால்வெட்டுதல் வேண்டும். ஒரு மணித்தியாலத்தின் பின்னர் பால் சேகரித்தல் வேண்டும். பால்வாளிகளை தூக்கிக்கொண்டு, மேடு பள்ளம் என ஒவ்வவொரு மரத்தடிக்கும் செல்லல் வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் எமதுதொழிலாளர்கள் விழுந்து காயத்திற்குள்ளாகுவார்கள்". அதுமட்டுமல்ல, அட்டை மற்றும் பாம்பு கடி போன்றவற்றுக்கும் பஞ்சமில்லை. அப்படியிருந்தும் எமக்கு ஒரு நாள் சம்பளமாக ரூபா 900 மட்டுமே வழங்கப்படுகிறது. அது எமது அன்றாட வாழ்கைக்கே போதுமானதல்ல.

அதிகாலை ஆறு மணியளவில் ஆரம்பமாகின்ற அவர்களது அன்றாட பணிகள் மாலை நாண்கு மணிக்கு நிறைவுறுவதாக இருந்தாலும் றப்பர் பால் சேகரிக்க வருகின்ற பவுசர் தாமதமானால், அவர்கள் மேலும் சில மணித்தியாலங்கள் காத்திருக்க வேண்டும். "அரிசி, சீனி, மாவு போன்ற அனைத்து பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. ஆனால் எமது தோட்ட தொழிலாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்படவில்லை. அரசாங்கம்தலையிட்டு இப்பிரச்சினைகளுக்கு தீர்வொன்றைப் பெற்றுத்தர வேண்டும்." வாழ்க்கைச் செலவுக்கேற்ற சம்பளத்தை பெற்றுத்தர வேண்டுமென மூன்று குழந்தைகளின் தாயான சிந்தாமணி வலியுறுத்துகின்றார்.

தாய் தந்தை என இருவரும் றப்பர் தோட்டத்தில் பணிபுரிந்தாலும் கிடைக்கின்ற வருமானம் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் பிள்ளைகளின் கல்விச் செலவுகளுக்கும் கூட போதுமானதல்ல. ஆகையால் பலர் தோட்டத்திற்கு வெளியில் கூலி வேலிகளைத் தேடிச் செல்கின்றனர். மொறத்தன்னை தோட்டத்தில் பாடசாலை செல்கின்ற வயதிலுள்ள மூன்று குழந்தைகளின் தந்தையான ரஞ்சனி குமாரும் மிகவும் கடினமான வாழ்க்கையை வாழ்ந்து வருகிறார்.

'2004 ஆம் ஆண்டு முதல் நான் தோட்டத்தில் வேலை செய்கின்றேன். 30 நாட்கள் வேலை செய்தாலும் ஈ.பி.எப், ஈ.டி.எப் மற்றும் யூனியனுக்கான சந்தா அறவிடப்பட்டு இறுதியில் எஞ்சும் சம்பளம் இருபத்தி நாண்காயிரம் மட்டுமே. அத்தொகை குழந்தைகளின்தேவைகளுக்கே போதுமானதல்ல. ஒரு பிள்ளை உயர்தரத்திலும் மற்றைய பிள்ளை சாதாரண தரத்திலும் கல்வி கற்று வருகின்றனர். மகள் ஆறாம் ஆண்டில் கல்வி கற்கின்றார். கணவர் மேசன் வேலைத் தேடிச் செல்கிறார்."



© IVAN VDOVIN/AGEFOTOSTOCK
X8N-3371461 - agefotostock

### சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு

றப்பர் உற்பத்தித் தொழிலில் அதிகளவு இரசாயனம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. குறிப்பாக அமோனியா பயன்பாடு றப்பர் தொழிலில் ஈடுபடுகின்ற தொழிலாளர்களுக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடியது. தோல் பாதிப்புக்கள், கண், மூக்கு, தொண்டை மற்றும் பார்வையில் பாதிப்பு ஏற்படுதல், கைவிரல் காயங்கள் போன்ற ஆபத்துக்களை அவர்கள் எதிர்கொள்கின்றனர்.

இவ்வாறான பாதிப்புகளுக்கு மேலதிகமாக பாம்பு மற்றும் பூச்சுக் கடிகளுக்கு உள்ளாகின்ற ஆபத்து றப்பர் தோட்டத் தொழிலாளர்கள் முகங்கொடுக்கின்ற பிரதான பிரச்சினையாகும். அதேபோன்று றப்பர் உற்பத்தியின் போது இரசாயன பயன்பாட்டு ஆபத்துக்களைப் போன்று மின்னொழுக்கின் காரணமாகவும் ஆபத்துக்கள் ஏற்படுகின்ற சாத்தியம் அதிகமானதாகும். இவ்வாறு 2018 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மின்னொழுக்கின் காரணமாக காலி போகொட றப்பர் உற்பத்தி தொழிற்சாலையொன்று முழுமையாக எரிந்து நாசமாகியது. இரசாயன கழிவுகள் நீரில் கலப்பதால் புளத்சிங்ஹல பிரதேசத்தில் றப்பர் தொழிற்சாலையொன்று அவ் ஆண்டில் மூடப்பட்டது.

உலக சுகாதார நிறுவனத்தைப் போன்று உலக தொழிலாளர் அமைப்பின் சிபாரிசுகள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கமைவாகவே இயங்குவதாக இந்நாட்டில் றப்பர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பிரதான பெருந்தோட்ட நிறுவனங்கள் தமது இணையத்தளங்களில் பதிவேற்றம் செய்திருந்தாலும் அவை எவையும் தொழிற்தளங்களில் பின்பற்றப்படுவதில்லை. கைக்கவசங்கள், பாதனிகள், தலைக்கவசம் மற்றும் பாதுகப்பு அங்கிகள் தமக்கு கிடைப்பதில்லையென குருணாகல், களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை, காலி போன்ற அனைத்து பிரதேச தோட்ட தொழிலாளர்களும் தெரிவிக்கின்றனர். தொழிற்தளத்தில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு வழிகாட்டல்கள் பற்றி அவர்களுக்கு எவ்வித விழிப்புணர்வும் இல்லை. அவர்களுக்கு இவ்விடயங்கள் தொடர்பில் தெளிவூட்டுவதில் தொழிற்சங்கங்களும் உதாசீனப் போக்கையே கடைப்பிடிக்கின்றன.

தோட்ட மருத்துவ நிலையங்களின் நிலைமை மிகவும் கவலைக்குரியது. பல தோட்ட நிறுவனங்கள் அவ்விடயம் தொடர்பில் அவதானம் செலுத்துவதேயில்லை.

'தோட்ட மருத்துவ நிலையங்களுக்கு மருத்துவர்கள் இல்லை. உதவியாளர்களும்

இல்லை, மருந்துகள் இல்லை மற்றும் ஏனைய உபகரணங்களும் இல்லை. பல மருத்துவ நியைங்கள் மூடப்பட்டுள்ளன. விசேடமாக முதியோர் மற்றும் குழந்தைகளின் சுகாதரம் தொடர்பில் அக்கறை கொள்வதில்லை" என இரத்தினபுரி மாவட்ட பாடசாலையொன்றின் ஆசிரியரொருவரான எம்.சந்திரகுமார் தெரிவிக்கின்றார். அவர் தமிழ் முற்போக்கு கூட்டணியின் மாவட்ட அமைப்பாளராவார்.

**தோட்டக்கல்வி**



பல தசாப்தங்களாக தமது பாட்டன் முப்பாட்டன் காலத்திலிருந்து தொடர்கின்ற பால் வெட்டுத் தொழிலிருந்து தமது பிள்ளைகளை விடுவித்து சிறந்த சமூக அந்தஸ்த்து மற்றும் வாழ்க்கை முறையைப் பெற்றுக் கொடுப்பதே இங்குள்ள அனைத்துப் பெற்றோர்களினதும் நோக்கமாகவுள்ளது. அவர்களின் கனவை நனவாக்கிக் கொள்வதற்கு இருக்கின்ற ஒரே வழி சிறந்த கல்வியை பெற்றுக் கொடுப்பதாகும். ஆனால் தோட்டப் பாடசாலைகளில் காணப்படுகின்ற குறைபாடுகள் காரணமாக அவர்களது எதிர்கால சந்ததியினரும் லயன் அறைகளுக்குள் முடக்கப்படும் நிலைமை காணப்படுகின்றது.

றப்பர் தோட்ட தொழிலாளர்கள் அதிகமாக வாழ்கின்ற இரத்தினபுரி மாவட்ட தமிழ் மொழி கல்வியின் நிலைமை மிகவும் கவலைக்குரியதாகும். நிவித்திகல தொலன்வல தோட்ட குடும்பமொன்றைச் சோந்த அந்தோனி மன்சில்மணி அம்மாவட்டத்தைச் சோந்த தொழிலாளர்களது குழந்தைகளின் கல்வி மேம்பாட்டுக்காகச் முன்னின்று செயல்படுகின்ற இளைஞராவார்.

'சாதாரண தரம் வரையிலான வகுப்புகளைக் கொண்ட 40 பாடசாலைகள் காணப்பட்டாலும் கணிதம் விஞ்ஞானம் ஆங்கிலம் மற்றும்தொழில்நுட்ப பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லை. உயர்தரத்தில் ஒருவர் சித்தியடைந்தால் அது கலைப்பிரிவில் மட்டும் தான். இரத்தினபுரியில் உயர்தர வகுப்புக்களைக் கொண்ட 22 தமிழ் மொழி மூல பாடசாலைகள் காணப்படுகின்றன. ஆனாலும் கணித விஞ்ஞான பாடங்கள் இல்லை. கொழும்பு கண்டி பாடசாலைகளில் எமது மாணவர்களை எடுப்பதில்லை." என மிகவும் கவலையுடன் அவர் தெரிவிக்கின்றார். ஆனாலும் சிவில் சமூக அமைப்புக்களுடன் இணைந்து தோட்ட பாடசாலை மாணவர்களுக்காக மேலதிக வகுப்புக்களை நடத்துவதன் மூலம் மிகச் சிறந்த சேவையை செய்து வருகிறார்.

பலங்கொடை, கஹவத்தை, புஸ்ஸல்ல, அகலவத்தை, துன்ஹிந்தை மற்றும் மதுரட்ட நிறுவனங்களின் கீழ் 20 றப்பர் தோட்டங்கள் நிர்வகிக்கப்படுகின்றன. பல தோட்டங்கள் றப்பர் மற்றும் தேயிலை பயிர்ச்செய்கைகளைக் கொண்டிருந்தாலும் கலவானை பிரதேச செயலகத்தில் மட்டும் பெரும்பான்மையானோர் சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களாக இருக்கின்றனர்.

'தோட்டங்களை அண்மித்து 102 தமிழ் பாடசாலைகள் மாவட்டம் முழுதும் காணப்படுகின்றன. ஆனாலும் அவற்றுக்கு ஆசிரியர்கள் இல்லை, உபகரணங்கள் இல்லை மற்றும் ஏனைய இதர வசதிகள் இல்லை. சாதாரணதரத்திற்கான கணித விஞ்ஞான பாடங்களுக்கான ஆசிரியர்கள் வடகிழக்கு மாவட்டங்களிலிருந்தே வருகை தருகின்றனர். ஆனால் அதிகளவான காலங்கள் அவர்கள் இங்கு இருப்பதில்லை" என தெரிவிக்கும் பாடசாலை ஆசிரியரான சந்திரகுமார், அரசியல் அதிகாரத்தில் தலையீடு செய்வதற்கு தோட்ட தொழிலாளர்களின் பிரநிதித்துவமின்மை பாரிய குறைபாடென கூறுகின்றார்.



கேகாலை, குருணாகல், கொழும்பு, காலி, மாத்தறை மற்றும் மொனராகலை போன்ற நகரங்களை அண்மித்த றப்பர் தோட்ட பாடசலைகளின் கல்வி நிலைமைமிகவும்கவலைக்கிடமான நிலைமையில் காணப்படுகின்றது. களுத்துறை மாவட்டத்தின் மத்துகம சென் மேரிஸ் பாடசாலையில் தமிழ் மொழி மூல வகுப்புக்கள் நடத்தப்பட்டாலும் தோட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் மீது ஏனைய மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் காட்டப்படுகின்ற பாரபட்ச செயற்பாடுகளினால் அம் மாணவர்கள் கடுமையான மன உழைச்சலுக்குள்ளாகியுள்ளனர்.




'தோட்டபுற மாணவர்கள் என்றவுடன் அவர்களை ஆய்வுகூடங்களுக்கு மற்றும் நீச்சல் தடாகங்களுக்கும் அனுமதிப்பதில்லை. இச்செயற்பாடுகளை ஆசிரியர்களும் அதிபர்களும் அனுமதிக்கின்றனர், பழைய மாணவர் சங்கத்தில் இது தொடர்பாக பேசப்பட்டால் எமது பிள்ளைகளை அடிக்க வருகின்றனர்" என அஸ்கெவெலிய தோட்ட அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் பத்மநாதன் தெரிவிக்கின்றார். இப்பிரச்சினைகளுக்கு மாற்று தெரிவாக மத்துகம நகரத்தை அண்டிய பிரதேசத்தில் அரசாங்கத்தின் மூலம் ஐந்து ஏக்கர் நிலமொன்றினை பெற்றுக்கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பிரதேசத்தின் பெரும்பான்மையானோர் சிங்கள கல்வி நிர்வாக அதிகாரிளாக இருக்கின்றமையினாலும் அவர்களால் மேற்கொள்ளப்படும் இழுத்தடிப்புக்கள் காரணமாக இதுவரை அம்முயற்சி தாமதமாகிக்கொண்டிருக்கின்றது.

அறுபதாம் ஆண்டு ஆரம்ப காலப்பகுதியில் தமிழ்மொழியில் 'முப்பனை" என்றழைக்கப்பட்ட மொனராகலை மாவட்டம் பண்டைய மாகம் இராசதானியை போன்று வேடுவர்களுக்கு சொந்தமான பல இடங்களுக்கும் உரித்துடைய மாவட்டமாகும். மாவட்டம் அமைக்கப்பட்டதன் பின்னர் பெரும்பான்மையானோர் மாத்தறை மாவட்டத்திலிருந்து வந்து குடியேறினர். மொனராகலை, பிபிலை மற்றும் படல்கும்புர ஆகிய மூன்று பிரதேச செயலக பிரிவுகளில் படல்கும்புரையில் மட்டும் தேயிலை பயிர் செய்யப்படுவதுடன் ஏனையவை பெரும்பாலும் றப்பர் தோட்டங்களாகும். மொனராகலை குமாரவத்தைக்கு அருகாமையில் உள்ள அலியாவத்த மற்றும் சிரியாவத்த லயன் அறைகள் மட்டும் அமைந்திருக்கின்ற இடங்களைத் தவிர ஏனைய இடங்கள் அனைத்தும் காடுகளாகியுள்ளன.

# மருதம் பசுமை நகர்

## Marutham Green City

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்




A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி

B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)

C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்

நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km

## உள்ளக வசதிகள்

- நூலகம்
- நீச்சல் தடாகம்
- உணவகம்
- சிறுவர் பூங்கா
- விளையாட்டுத்திடல்
- மீன்பிடி குளம்

0777 43 55 57




இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.09.2024இல் வெளியிடப்பெற்றது.